உ

தேவிசகாயம்.

—o—

ANUBOGAVYTHIA

BRAMARAHASIAM

அநுபோகவயித்திய

பிரம்மரகசியம்.

முதற்பாகம்.

இஃது

ஜெகந்நாதஸ்தலம்.

கோஷாயி சுவாமிகள்

அநுக்கிரகத்தின்படி

சிறுமணவூர்.

முனுசாமி முதலியாரால்

எழுதி முடிவுபெற்று,

ஸ்ரீ சுந்தரவிலாச அச்சுக்கூட தலைவர்

பூவிருந்தவல்லி.

பூ. சு. குப்புசாமி முதலியார் குமாரர்

பூ. சு. கு. கோவிந்தராஜ் முதலியார்

அவர்களால் வெளியிடப்பட்டது

1940

(Registered Copy Right.)

உ
தேவிசகாயம்.

முகவுரை.

இந்த அனுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும் நூலானது வெளிவந்தகாரணமும், இதனுள் அடங்கிய விஷயங்களுக்கும். இங்ஙனம் முகவுரையெனப் பேர்வகித்து சுருக்கமாக எழுதி முடிக்கப்பட்டிருக்கிறது.

ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயி சுவாமிகளால் நெடு வருடங்களாக காசி முதலான திவ்வியக்ஷேத்திர யாத்திரை வாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள் யாவையும், தமது சிஷ்யவர்க்கத்துள் சிரேஷ்டராகிய திருமணவை நல்லண்ண பரதேசியாரவர்களுக்கு அநுக்கிரகித்தவண்ணமும் யிதுவரையிலாக தன் முயற்சிகொண்டனுபோகித்துவந்த கைமுறைகளேயும். இவரது, மருமகப்பிள்ளை ம-௱-௱-ஸ்ரீ, திருமணவூர் முனுசாமி முதலியாரவர்களால் இன்னும் சிலவற்றை சேர்த்து சுமார் (2500) முறைகளடங்கக் கோர்வையிட்டெழுதி முடித்து அனுபோகவயித்திய பிரம்மரகசியம்மேன்னும் பேர் அமைந்திருக்கும் இந்நூலுக்கு போதுமான பொருளேச் சிலவிட்டு அச்சிடுவித்தவராகிய ம-௱-௱-ஸ்ரீ, பூ. சு. குப்புசாமிமுதலியார் குமாரன், பூ. சு. கு. கோவிந்தராஜ் முதலியார் அநுமதியின்றி இந்நூலே பிறர் எவ்விதத்தும் அச்சிடாதபடிக்கு (கெவர்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்டர்காபிரைட் செய்திருக்கின்றது.

{ அனுபோகவயித்திய பிரம்மரகசியம்
8-காண்டங்களும் தயாராயிருக்கின்றது. }

1. முதல் 8-காண்டமும் ஒரேகட்டடம் விலே ரூபா 4-0-0
V. P. போஸ்ட்சார்ஜி அணு 0 14 0

எமதுவிலாசம்,

பூ. சு. கு. கோவிந்தராஜு முதலியார்,
வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

உ

தேவிசகாயம்.

நூலிநுட்பிரிவு.

விஷயம்.		பக்கம்.
1	சரக்குகளின்சுத்திவகைபரணி.	12
2	மாத்திரைவகைபரணி.	20
3	கட்டுவகைபரணி.	32
4	பற்பவகைபரணி.	39
5	செந்தூரவகைபரணி.	46
6	மெழுகுவகைபரணி.	51
7	லேகியவகைபரணி.	54
8	எண்ணெய்வகைபரணி.	58
9	தைலவகைபரணி.	68
10	வீரியவிர்த்திவகைபரணி.	70
11	கண்டாவிழ்தவகைபரணி.	73
12	ஜீரணகாலநாழிகை.	86
13	இடைகளின்விவரம்.	87

இப்புத்தகம் வேண்டுபவர்கள்.

சென்னை புரசை புதுமார்கட்டுக் கடுத்த பெருமாள் பேட்டை வல்லம்பங்காருசெட்டிதெரு, 31-வது, நெம்பர்வீட்டிலிருக்கும் பூ. சு. குப்புசாமிமுதலியார் குமார். பூ. சு. கு. கோவிந்தராஜு முதலியாரிடம், (இப்புஸ்தகமும்) இன்னும் எல்லாவித தமிழ்புத்தகங்களும் ஆயுள்வேத அநுபோக அவிழ்தங்களும் உயர்ந்த கெடியாரங்களும் தங்கசிலிட் நகைகளும் ஜர்மன்சில்வர்நகைகளும், இன்னும் அனேக பலவித சாமான்களும்,விலைசரசமாய் கிடைக்கும்.

☞ தங்கள் விலாசம் தெரிவித்தால் பலவித சாமான்களடங்கிய பெரிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

எமது விலாசம்:

P. K. கோவிந்தராஜ்
மெடிகல்ஹால்,
பேப்பேரி போஸ்ட், மதராஸ்.

உ

தேவிசகாயம்

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
லிங்கசுத்தி	12	இரும்புசுத்தி	0
வீரசுத்தி	13	காந்தசுத்தி	0
பூரசுத்தி	0	அயத்தொட்டிசுத்தி	0
முதார்சிங்கிசுத்தி	0	தொட்டிசுத்தி	18
கெவுரிசுத்தி	0	தொட்டிபாஷாணசுத்தி	0
மனோசிலைசுத்தி	0	பொன்னிமிளைசுத்தி	0
ரசசுத்தி	0	சகஸ்திரபேதிசுத்தி	0
வங்கசுத்தி	14	செங்கொட்டைசுத்தி	0
கருவங்கசுத்தி	0	சிவதைசுத்தி	0
நாகசுத்தி	0	அமுக்குராசுத்தி	0
கல்நார்சுத்தி	0	சுக்குசுத்தி	0
சிலாசத்துசுத்தி	0	மிளகுசுத்தி	0
கெருடப்பச்சைசுத்தி	0	திப்பிலிசுத்தி	0
சீனம்சுத்தி	0	ஓமம்சுத்தி	0
படிகாரம்சுத்தி	15	சீரகம்சுத்தி	19
வெண்காரசுத்தி	0	ஊமத்தன்விரைசுத்தி	0
முடிதாரசுத்தி	0	எட்டிக்கொட்டைசுத்தி	0
பால்துத்தம்சுத்தி	0	கொம்பரக்குசுத்தி	0
துருசுசுத்தி	0	மாசிக்காசுத்தி	0
மடல்துத்தம்சுத்தி	0	வெண்ணெய்சுத்தி	0
பச்சைதுருசுசுத்தி	0	அமுக்குராவேர்சுத்தி	0
பவழப்புத்துசுத்தி	0	பேதிக்கிபகிரிமாத்திரை	20
அஞ்சனக்கல்சுத்தி	0	இராத்திரிபேதிமாத்திரை	0
கல்மதம்சுத்தி	0	பேதிமாத்திரை	0
நாபிசுத்தி	16	சுகபேதிமாத்திரை	0
நேர்வாளசுத்தி	0	குழந்தைகள் தித்திப்பு பேதி	22
தாளகசுத்தி	0	ஷை மாந்தமாத்திரை	0
தாளகசுத்தி	0	வீரசஞ்சீவிமாத்திரை	23
பாஷாணசுத்தி	17	ஜன்னிபாதவைரமாத்தி	24
௬௪-பாஷாணசுத்தி	0	ஏலாதிமாத்திரை	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
மலஜெலகட்டுக்குமாத்திரை	24	படிகாரபற்பம்	41
பயிரவமாத்திரை	25	பச்சைவெட்டுவீரபற்பம்	0
இராமபாணமாத்திரை	0	பலகரைபற்பம்	42
முரைக்காச்சல்மாத்திரை	26	மான்கொம்புபற்பம்	0
குங்குமப்பூமாத்திரை	0	பவழபற்பம்	0
லிங்கமாத்திரை	27	கெட்டிமுத்துபற்பம்	0
கோரோஜனமாத்திரை	0	சங்குபற்பம்	43
ஆனந்தபயிரவமாத்திரை	28	ஆசையோடுபற்பம்	0
கஸ்தூரிமாத்திரை	0	கருவங்கபற்பம்	0
கட்டுவாதிமாத்திரை	0	கல்நார்பற்பம்	0
கட்டுவாதிமாத்திரை	29	தங்கபற்பம்	44
பூபதிமாத்திரை	0	தாளகபற்பம்	0
லவுங்கமாத்திரை	0	ரசபற்பம்	0
வீரசஞ்சீவிமாத்திரை	30	வெள்ளிபற்பம்	0
தாபசுரமாத்திரை	0	நாகபற்பம்	45
கிராணிகழிச்சலுக்குமாத்தி	31	தங்கபற்பம்	0
மாகாபோகமாத்திரை	0	திரிலோகசெந்தூரம்	46
மகாகோடாசுழிமாத்திரை	0	அன்னபேதிசெந்தூரம்	0
அண்டவாதமாத்திரை	33	ஷை வேருவிதசெந்தூரம்	0
சுராங்கிஷமாத்திரை	0	ராமபாணசெந்தூரம்	0
சுராங்கிஷசுருக்குமாத்தி	34	பாலைகுதசெந்தூரம்	47
மத்தியானமாத்திரை	0	கனமண்டூரசெந்தூரம்	0
ஊழிமாத்திரை	35	சண்டமாருதசெந்தூரம்	48
லிங்கக்கட்டு	36	சண்டமார்த்தாண்டசெந்தூ	0
ஷை வேருவிதகட்டு	0	பூநாணிசெந்தூரம்	49
வீரகட்டு	37	தாம்பிரசெந்தூரம்	50
பூரகட்டு	0	வெள்ளைபாஷாணமெழுகு	51
ரசகற்பூரகட்டு	0	கோரோஜனமெழுகு	0
சுருசுன்னத்தில்லிங்கக்க	38	தோஷாமிர்தமெழுகு	52
ஷை வேறுவிதகட்டு	0	வாதமாருதமெழுகு	0
வங்கபற்பம்	39	கஸ்தூரிமெழுகு	53
வெள்வங்கபற்பம்	0	கட்டுவாதிலேகியம்	54
ஷை வேருவிதபற்பம்	40	கடுக்காய்லேகியம்	0
கரிவங்கபற்பம்	0	நெல்லிக்காய்லேகியம்	55
பேரண்டபற்பம்	0	சுக்குலேகியம்	0
சீமைகல்நார்பற்பம்	0	மிளகுலேகியம்	0
கற்பூரசிலாசித்துபற்பம்	41	இருமலுக்குலேகியம்	56

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
திப்பிலிலேகியம்	56	திரேகதிதானத்தைலம்	72
மதனகாமேசுரலேகியம்	0	ஐங்கூட்டுத்தைலம்	0
இந்திரியவலிவுக்குமானி	57	அப்பியங்கஸ்நானவிதி	0
குளிர்ச்சியெண்ணை	58	தைலஸ்நானவிதி	0
மேகவெட்டைக்கியெண்ணை	0	இந்திரியக்கட்டுக்குசூரண	73
சுகபேதியெண்ணை	59	இந்திரியபுஷ்டிக்கு	0
சேந்தமங்கலத்துயெண்ணை	0	இந்திரியங்கட்ட	0
கெர்பஸ்திரீகட்குயெண்	60	இந்திரியபந்தனம்	0
மேககுட்டசொரிக்குயெண்	0	வீரியவிர்த்திக்கி	74
நாரசிம்மயெண்ணை	61	இந்திரியதம்பனம்	0
கெணசூட்டுக்குயெண்ணை	62	லேபனத்திற்கு	0
குழந்தைகள்மாந்தயெண்	0	விந்துகலிதமாகாதிருக்க	0
ஷை சகலமாந்தயெண்ணை	0	பீஜம்கெட்டிப்பட	0
ஷை அள்ளுமாந்தயெண்	63	ஷை லேபனத்தைலம்	0
சுழிமாந்தயெண்ணை	0	வீரியவிர்த்திக்கி	75
ஏலம்பேட்டுயெண்ணை	0	வீரியவிர்த்திலேகியம்	0
அணக்கட்டாத்தூர்யெண்	64	இருதயவலிவிற்கு	76
கெணத்துக்குயெண்ணை	0	சரீரம்நன்றாக	0
சகலகரப்பான்யெண்ணை	65	ஆரோக்கியகலிக்கம்	77
யாழ்பாணத்தெண்ணை	0	நேத்திரபேதி	0
பக்கசூலைக்கியெண்ணை	66	அந்திமாலைக்கி	0
விரைவாதயெண்ணை	0	நேத்திரசுத்திகம்பி	0
சித்திரமூலயெண்ணை	67	தூர்மாமிசவளர்த்திக்கு	0
சகலவாய்வுயெண்ணை	0	காதுசீழுக்கு	0
பிரம்மராகாசித்தைதலம்	68	காதுசீழ்குத்தலுக்கு	78
ஜன்னிக்கிதைலம்	0	காதுசீழ்வேதனைக்கு	0
வில்வாதிதைலம்	69	காதிரைச்சலுக்கு	0
வெட்டிவேர்தைலம்	0	காதில்சதைவளர்ச்சிக்கு	0
கீழாநெல்லிதைலம்	0	காதுபொங்குதல்சீழ்	0
மண்டைசூலைக்கிதைலம்	0	நீர்சுருக்கிற்கு	0
கபாலசூட்டுக்குதைலம்	70	நீரடைப்புக்கு	0
பொன்னுங்கணிதைலம்	0	ஆசனக்கடுப்புக்கு	0
ஒண்டிதலைநோவுக்குதைலம்	0	வெள்ளைக்கி	79
சுகாநந்ததைலம்	71	தீராதவெள்ளைக்கி	0
சாலேசுரத்தைலம்	0	புதுவெள்ளைக்கி	0
பித்தகோடாரிதைலம்	0	இரத்தவெள்ளைக்கி	0
பீனிசத்தைலம்	0	மேகந்தீர	0

அவுஷதங்கள்.	பக்கம்.
கொருக்கிற்கு	80
ஆராதரிணத்திற்குகளிம்பு	0
மேகசூட்டுக்குசாந்தி	0
நீர்கடுப்புக்கு	0
மலற்சிக்கலுக்கு	0
மலம்உதைய	0
வயருகடுப்புக்கு	0
கைகால்குடைச்சலுக்கு	81
வெட்டுகாயஉதிரத்திற்கு	0
வெட்டுகாயரிணங்களுக்கு	0
சொரிசிரங்கிற்கு	0
சகலபடைகளுக்கு	0
இரைப்புயிருமலுக்கு	0
கோழையிருமலுக்கு	0
புகையிருமலுக்கு	82
மார்கபத்திற்கு	0
இருமலுக்கு	0
இரப்புவியாதிக்கு	0
இரத்தங்கட்டியவியாதிக்கு	0
சிறுவர்வயற்றுப்பூச்சிக்கு	0
பெரியவர்வயற்றுப்பூச்சிக்கு	0
புண்கள்ரிணங்களிலிருக்கும் புழுவுகள்வெளிப்படமரு	83
காக்கைவலிவிக்கலுக்கு	0
கீல்வாய்விற்கு	0
புதியமூலத்திற்கு	0
பேதிக்கு	0
விரைவீக்கத்திற்கு	0
காதுநோய்மந்தத்திற்கு	84
கிராணிக்கு	0
ரத்தகிராணிக்கு	0
பசிதீபனத்திற்கு	0
பல்லில்ரத்தம்விழுதலுக்கு	0
பல்வலிவுற்கு	0
பல்நோயிற்கு	0
பல்நோயிற்குதேய்க்க மருந்து	85
மாதவிடாயுண்டாக	0
தெரளாதபெண்களுக்கு	0

அவுஷதங்களின் அட்டவணை.

முற்றுபெற்றது.

உ

தேவிசகாயம்.

பண்டித பாலசிக்ஷை

ஆயுள்வேத அரிச்சுவடி யென்னும்

அநுபோகவயித்திய

பிரம்ம ரகசியம்.

விநாயகர் வணக்கம்.

கலி விருத்தம்.

முந்தியுதித்தனை முக்கணர்க்கோர்கனை
தந்திமுகத்தனை தார்புனைத்தோளனை
சிந்துரத்தனை சித்திசமேதனை
வந்தனைசெய்து வழிபடுவாமரோ.

கடவுள் வணக்கம்.

நால்வகையோனிபேத மெழுவகைப்பிரப்பாய்நீண்ட
கால்வகையுயிர்கள்யாவுங் காத்தளித்தழிக்கவல்ல
நால்வகைநிரைந்தமெய்யை நண்மணக்குரவர்க்கெல்லாம்
மேல்வகைகொடுக்குமொன்றை மனதினில்நினைதல்செய்வாம்.

நூன்முகம் வியாசர்வாக்கு.

நினைப்பதொன்று சொல்வதொன்று நிகழ்த்தலொன்று
நெஞ்சிரக்கமில்லாத சித்தர்செய்கை
வினைத்தொழிலை யொவ்வுமடா குருவில்லாட்டால்
விவரமதை சுட்டுரைக்க ஆசான்வேண்டும்
அனைத்துயிரும் தன்னைப்போல் கருதலன்றி
ஆந்திரியம் விண்டார்க ளாருமில்லை
மனக்களங்க மற்றல்லோ மார்க்கஞ்சொன்னேன்
மகத்தான வேதத்துக் காதியோனே. (க)

ஆதியாய்வேதங்கள் நான்குஞ்சொன்னேன்
ஆராகச்சாத்திரத்தைப் பிரித்துவைத்தேன்
நீதியாங்கலைகளறு பத்தினாலும்
நிலைகாட்டுந்தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
பேதியாதேயுலக வாதாரங்கள்
பேசினதாலிழையேனும் பிசகலுண்டோ
வாதிமுதல்வைதியர்கள் சீமானாக
வரைந்திட்டரகசியமாம் முறையைப்பாரே. (௨)

முறைகளிதுவனுவேனும் பிசகிராது
மூர்த்தியொடுசத்தியிடப் பாகமப்பா
திரையொன்றுமில்லாமல் விரித்துப்போட்டோம்
தெரியாத மானிடர்க்கு வேணுமென்றே
நிறைபோலபேசுமனு போகவித்தை
நெஞ்சிரங்கிசொன்னமொழி செய்துபாறு
பரைசிவனும்வாதிட்டு சொன்னமார்க்கம்
பாரறியவெளியிட்டோன் வியாசன்தானே. (௩)

தானென்றஆன்மாவை யறியவேணும்
தங்குமிடம்பொங்குமிடங் காணவேணும்
நானென்ற ஐவர்களை யடக்கவேணும்
நல்லவர்க்குவல்லுடம்பை யீயவேணும்
கோனென்றமும்மலத்தை யொடுக்கவேணும்
கோடியுகமானாலும் யிருக்கவேணும்
வானென்றவுலகாள யிதுவேவித்தை
வையகத்துவித்தையெல்லா மவத்தைதானே. (௪)

அவத்தையிலே ஆவலிட்டு பணத்தைத்தேடி
அந்தகனுக்காளாகிப் பிரவியாழ்ந்து
தவத்தையெல்லாங்கைச்சோர்ந்து வீணாள்போக்கி
தாருடையான்திகிரியைப்போல் தலைகீழாகி
பவத்துக்கேமனமோர்ந்து சின்னாள்வாழ்வாம்
பாரிடத்தேபுக்குவதில் பலந்தானென்னோ
சிவத்துக்கேஆளாகும் பெரியவித்தை
செய்வித்தைமெய்வித்தை செய்துபாரே. (௫)

பாரப்பாமானிடர்கள் பிணிகடீர்த்தால்
  பராபரத்தினருளுனக்கு பலிக்குமன்றோ
ஆரப்பாயிவ்விதமாய் போதித்தார்கள்
  அனுபோகமானதொரு முறைகளெல்லாம்
கூறப்பாசித்தருட நூலுக்கானால்
  குருஒருவனில்லாட்டால் குப்பையாகும்
நேரப்பாயினூலுக் காசான்வேண்டாம்
  நீயாகச்செய்துகொண்டு நெறியைக்காரே. (௬)

காரணமேகத்தின் உதவிபோலே
  கனசரக்குபாஷாண தித்தியோடு
தீராதுநோய்களுக்கு கைப்பாகந்தான்
  திரட்டிஞெம்குளிகைசெந் தூரம்பற்பம்
பாரானதைலமெண்ணை கிருதங்கட்டு
  பற்பலவாம்விஷநீக்கு பரணியோடு
பேரானசிறுமணவூர் முனிசாமிச்சொல்
  பிரம்மனூல்ரகசியபா யிரமுமுற்றே. (௭)

ஆண்பெண் இரேகை சாஸ்திரம்.

சகலசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த நம்முன்னோர்கள் மிகச் சிறந்த அனேகநூற்களை நமக்கு இம்மை மருமைத்தருவனவாக வருளிச்செய்தனர் அவைகளை அறிந்துறைப்பது அருமையாய்விட்டன. ஆதலின் அவைகளின் பொருளையறிந்து யாவரும் யெளிதில் உணரும்படியாய் ஆயுள், செல்வம், புகழ், புத்திரகளத்திராதி சம்பத்து சீலம்பேரின்பமாகிய யின்பங்களை பூரணமாக யாவத்திரானும் இந்த கைகண்ட சாஸ்திரமானது (ஆண்பெண்) அவயங்களிலுள்ள ரேகைகள் உள்ளங்கால்முதல் உச்சி வரையிலும் ஒவ்வொன்றிற்கும் ஸ்திரீகளிடத்தும் புருஷர்களிடத்தும் விதிப்படி ஆராய்ந்து இந்நூலின் லட்சணங்களை பரிசோதிக்கில் ஆயுள், செல்வம், புகழ், சீலம், புத்திரகளத்திரசுகம் ஆகிய இவைகளும் மற்றுமுள்ளவைகளும் இவ்வளவினவென்றும் ஒவ்வொருவரும் யெளிதிலறியலாம். புத்தகம் 1-க்கு விலை அணா 8.

எமது விலாசம்:—

பூ. சு. குப்புசாமி முதலியார் & சன்,
ஸ்ரீ சுந்தரவிலாசம் பிரஸ்,
நெ. 31, வல்லம் பங்காருசெட்டி தெரு,
வேப்பேரி போஸ்ட் மதராஸ்.

உ

தேவிசகாயம்.

முதலாவது
சரக்குகளின் சுத்திவகை
பரணி.

கன்மத்தால்வந்தபிணி நீக்கவேண்டி
  கருவறிந்தபண்டிதரே கழரக்கேளீர்
வன்மமென்னசரக்குவகை குணங்களாய்ந்து
  வளமானசுத்திசெய்து வழங்கினோர்க்கு
தன்மவினிவேருண்டோ தரணிமீது
  தாக்கானசொர்க்கபதி தான்கிட்டாதோ
உன்மதமாய்முறைப்பிசகி யுதவும்பேர்க்கு
  ஒருகாலும்மோட்சமில்லை யூணிப்பாரே.

இந்நூலை விசுவாசிக்கும் புத்திமான்களுக்குக் கூறுவது யாதெனில்? இதில் அடங்கிய அவிழ்தபாகங்களின் யாதொன்றையும் கையாட விரும்பும்போது அம்முறைக்கு வேண்டிய தினுசுகள் யாதோ அதை இங்ஙனம் வரைந்துள்ளபடி சுத்திசெய்து (அதாவது) துற்குணங்களை நீக்கி உபயோகித்தலே புத்திமான்களுக்கழகாம், மற்றபடி கடையினின்று வாங்கிய வண்ணம் புடங்கள், அறைத்தல் கூட்டல், கட்டல்முதலான மார்க்கங்களாக கையாடி பிரஜைகளுக்கு உபயோகித்தால் விணைக்கீடாகிய வியாதியானது ஒன்றைவிட்டொன்று அதிகரிப்பதுடன் ஜீவயிம்சையு மேற்படுமாதலால் முதலாவது சரக்குசுத்தி விபரம் கூறலாயிற்று இதுபோல் ஒவ்வொருசரக்கையும் சுத்திசெய்துக்கொண்டு பிறகு அவிழ்தங்களுக்கு உபயோகப் படுத்தவும்.

லிங்கசுத்தி—லிங்கம் ஒருகட்டியாக வாங்கி தேனில் ஒருநாள்
,, ஊரி முலைப்பாலில் ஒருநாள்ஊரி மறுநாள்
,, யெடுத்து எலுமிச்சம்பழரசம் குப்பைமேனி
,, ரசம் முலைப்பாலும் சமமாய் கலந்துக்கொண்டு

,, அடுப்பின்மேல் சட்டிவைத்து அதில் மேல்படி
,, லிங்கத்தை வைத்து புகையாமல் சுருக்குக்
,, கொடுக்கவும் சுத்தியாம் இதற்குலிங்கக்கட்
,, டென்றும் பெயர்.

வீரசுத்தி—வீரத்தை ஒரு யிளநீரில் (கவ) விராகநிடை கற்பூ
,, ரம் போட்டு கலக்கி சட்டியில் ஊத்தி அடுப்பி
,, லேத்தி ஷை வீரத்தை தொலாந்திரமாகக்
,, கட்டி யெரித்து யெடுத்துக்கொள்ளவும்.

பூரசுத்தி—பூரத்தை வெற்றிலை மிளகு கியாழமிட்டு அதில்
,, கிளிக்கட்டி மூன்றுநாள் ஊறவைத்து யெடுத்
,, துக் கொள்ளவும்.

முதார்சிங்குசுத்தி—முதார்சிங்கியை வெள்ளாட்டு கோமியத்
,, தில் ஒரு நாழிகை கொதிக்க வைத்து யெடுத்
,, துக் கொள்ளவும்.

கெவுரிசுத்தி—வெள்ளை கெவுரியைக் கொண்டுவந்து பசும்
,, பால் அல்லது சாணிப்பால் சுண்ணும்பு நீர்
,, மிளகு கியாழம் இன்னுன்கில் எதிலாவது
,, தொலாந்திரமாகக் கட்டி யெரித்தெடுத்துக்
,, கொள்ளவும் பிறகு பன்றிப்பாலில் கிளிக்
,, கட்டி அவித்தெடுத்துக் கொள்ளவும் சுத்தி
,, யாச்சு.

மஞேசிலைசுத்தி—மஞேசிலையை காடியில் கிளிக்கட்டி யெடுத்
,, துக் கொள்ளவும் வெள்ளாட்டு மூத்திரத்தில்
,, தொலாந்திரம் கட்டி யெரித்தெடுத்துக்கொள்
,, ளவும்.

ரசம்சுத்தி—சூதத்தை அருக்கன்பாலில் ஒருநாள்வூரி செங்
,, கத்தான் கொட்டை சற்கரை யிதுகளில்
,, அறைத் தெடுக்கவும்.

வங்கசுத்தி—வங்கத்தை யிலுப்பையெண்ணெயிலாகிலும் தே
,, ங்கா யெண்ணெயி லாகிலும் நவாச்சாரத்
,, தூள் தூவி அதில் ஏழுதிரம் உருக்கிச் சாய்க்
,, கவும் அல்லது மோர்காடி கோமியம் பழரசம்
,, இதுகளிலும் உருக்கிசாய்க்கலாம் இப்படியே
,, நாகத்தையும் சுத்திசெய்துக் கொள்ளவும்.

கருவங்கசுத்தி—கருவங்கத்தை வெள்ளாட்டு மூத்திரத்தில்
,, பிரண்டைவேர் அரைத்துப்போட்டு நல்லெண்
,, ணெய்விட்டு கலக்கிக்கொண்டு அதில் பத்து
,, திரம் உருக்கிச் சாய்க்கவும் சுத்தியாம்.

நாகசுத்தி—நாகத்தை ஆட்டுநெய் கொண்டுவந்து உருக்கி
,, சிறுநீர் பழரசம் கூட்டி சாரம் கல்சுன்ன
,, மிட்டு கலக்கிவைத்துக்கொண்டு அதில் நாகத்
,, தை பத்துதிரம் உருக்கிச்சாய்க்கவும் சுத்தி
,, யாம்.

கல்லுர்சுத்தி—கல்லுரை கழுதைமூத்திரத்தில் மூன்று நாழி
,, கை ஊரினபின் கழுவி யெடுத்துக் கொள்ள
,, வும் சுத்தியாம்.

சிலாசத்துசுத்தி—சிலாசத்தை பழரசத்தில் போட்டு கொதிப்
,, பித்துயெடுத்து எருக்கன்பாலில் மூன்று நாழி
,, கை ஊரியபின் கழுவி யெடுத்துக்கொள்ளவும்
,, அல்லது அல்லிப்பூ ரசத்தில் ஊரியும் யெடுக்
,, கலாம் ஆவின்பாலில் தொலாந்திரம்கட்டி
,, எரித்தும் யெடுத்துக் கொள்ளலாம்.

கெருடப்பச்சைசுத்தி—கெருடப் பச்யையை பயறுபோல்
,, செய்து கிளிக்கட்டி குமரிச்சாற்றில் (௩டும)
,, நாழிகை ஊரியபின் யெடுத்துக்கொள்ளலாம்.

சீனம்சுத்தி—பசும்பாலில் மூன்றுஜாமம் ஊரியபின் எடுத்
,, துக் கொள்ளவும் சுத்தியாம்.

படிகாரம்சுந்தி—எருமைசாணத்தில் கிளிக்கட்டி வைத்து
,, எடுத்துக்கொள்ளவும் அல்லது கிறுநீரில்
,, மூன்றுநாளூரவைத்து எடுத்துக் கொள்ளவும்

வெண்காரம்சுத்தி—வெண்காரம் பொரித்துக்கொள்ள வே
,, ணுமானால் காடியிலாவது அல்லது பழரசத்
,, திலாவது அரைத்து பில்லைதட்டி உலர்த்தி
,, யெடுத்துக் கொள்ளவும்.

முடிதாரம்சுத்தி—பனங்கள்ளு படி நாலில் கிளிக்கட்டி யெ
,, ரித்து யெடுத்துக் கொள்ளவும்.

பால்துத்தம்சுத்தி—கிளிக்கட்டி சிறுவர்கள் மூத்திரத்தில்
,, ஏழுநாள் ஊறினபின் பசும்பாலில் இரண்டு
,, ஜாமம் ஊரவைத்து எடுத்துக்கொள்ளவும்.

துரிசிசுத்தி—தயிரினாலரைத்து அதைதட்டி ஓடுகாயவைத்து
,, அதில் பிரட்டி எடுத்துக்கொள்ளவும் அல்லது
,, தயிரில் ஒருஜாமம் ஊரியெடுக்கவும்.

மடல்துத்தம்சுத்தி—வெண்ணெய் அல்லது தயிர்சுற்றுமை
,, சாற்றில் ஊரவைத்து எடுத்துக்கொள்ளவும்.

பச்சைதுரிசிசுத்தி—பசுங்கோமியத்தில் யெரித்துக் கழுவி
,, உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

பவழப்புத்துசுத்தி—பசும்மோரில் கிளிக்கட்டிவிட்டு நாலு
,, நாழி யெரித்து எடுத்துக்கொள்ளவும்.

அஞ்சனக்கல்சுத்தி—புளியாரை ரசத்தில் ஒருநாள் ஊரி
,, யெடுத்துக்கொள்ளவும்.

கல்மதம்சுத்தி—கல்மதத்தை சிறுநீரில் கழுவி யெடுத்துக்
,, கொள்ளவும்.

நாபிசுத்தி—பருத்தியிலை ரசத்திலூரி முத்திலைக்குள் வைத்து
,, சுத்தி கும்பியில்சொரிகி ஒருநாழி பொருத்
,, தெடுத்து சீந்தில் கியாழத்தில் தொலாந்திரங்
,, கட்டி எரித்து பிறகு யெருக்கன் பாலில்
,, சற்றுஊரி கோமியத்தில் கழுவி எடுத்துக்
,, கொள்ளவும்.

நேர்வாளசுத்தி—எருமைசாணத்தில் காடிவிட்டு கலந்து
,, அதில் வாளத்தைப்போட்டு கொதிக்கவைத்
,, தெடுத்து நஞ்சுநீக்கி அதாவது அந்த பருப்
,, பைப்பிளந்து மூளைநீக்கி காடிமோர் பழரசம்
,, கலந்து அதில் கொதிக்கவைத்து எடுத்துக்
,, கொள்ளவும்.

தாளகசுத்தி—தாளகத்தை சிறுதுண்டுகளாகச் செய்து சிறிய
,, மொந்தைக் குடுவையில்யிட்டு மேலே மூடும்
,, ஓட்டில் மூணு துவாரஞ்செய்து கரிநெருப்பின்
,, மீது வைத்து விசுருகையில் முதல் கருப்பு
,, புகை வந்து பிறகு சிகப்பு புகைவருங் காலத்
,, தில் எடுத்துக்கொள்ளவும்.

தாளகசுத்தி—தாளகத்தை சுண்ணாம்புக்குள் வைத்து
,, கழுதை மூத்திரம்விட்டு யேழுதிரம் தாளித்து
,, எடுத்து சுன்னநீர் கொள்ளுக் கியாழம் தயிர்
,, * பூசினிக்காய் நீர்காடி அகத்திக்கீரை விரை
,, தயிலம் இவைகள் கூட்டி இரண்டு ஜாமம்
,, சுருக்கு கொடுக்கவும் கரந்தை சாற்றில்
,, இரண்டுஜாமம் சுருக்கு கொடுத்து யெடுத்து
,, சத்தி சாட்டரணைவேர் குக்கில் இதை முருங்
,, கிலை ரசத்தாலரைத்து கவசம் செய்து லகு
,, புடமிட மிகுந்தசுத்தியாம் பிறகு சகல அவிழ்
,, தத்திற்கும் உபயோகப்படுத்தலாம்.

* பூசினிப்பழத்தை மேலேகீரி (ரு) விராகனிடையிந் துப்பு போட்டு அடியில் யெழுத்தாணியால் துவாரம்செய்து மேலேதூக்கிக் கட்டி அடியில் பீங்கான்வைத்து யிரங்கும் நீர் யெடுத்துக்கொள்ளவும்.

பாஷாணசுத்தி—அறுபத்திநாலு பாஷாணங்களும் சுத்தி
,, செய்யவேண்டில் குப்பைமேனிரசம் கற்றாழம்
,, பால் சிறுநீர் பழரசம் செம்பருத்தி வெத்திலை
,, ரசம், வகைக்கிப்படி-க, முலைப்பால்படி-வ,
,, இவைகளை பாண்டத்திலிட்டு அதில் பாறை
,, யுப்பு வெடிகாரம் படிகாரம் நவாச்சாரம்
,, வகைக்குப்பலம்-வ, தூள்செய்து கலந்து
,, கிளிக்கட்டியிட்டு நிழலாக காற்றில்லாவிடத்
,, தில் பதினைந்துநாள் வைத்தெடுத்து காடியில்
,, ஊரவைத்து யெடுத்துக்கொள்ளவும்.

சுசு-பாஷாணமும்ஏகசுத்தி—மேனிரசம் தக்காளிரசம் ஊமத்
,, தன்ரசம் பழரசம் சிறுநீர் காடி சமனாகக்
,, கலந்து இதில் உப்பு சுன்னம் வெடியுப்பு
,, நவாச்சாரம் சீனம் வகைக்குப்பலம்-க, தூள்
,, செய்து கலந்து சரக்குகளை கிளியாய்கட்டி
,, மண்டலம்யிட்டு எடுத்து உணர்த்திக்கொள்ள
,, மிகுந்த சுத்தியாம்.

இரும்புசுத்தி—இரும்புப்பொடியை ஒருநாள் பழரசத்தில்
,, ஊரவைத்து எடுத்து மறுநாள் எள்ளெண்
,, ணெயில் ஊரவைத்தெடுத்து அயச்சட்டியில்
,, போட்டு வருத்து காடியில்கழுவி வேலம்பட்
,, டைகியாழத்தில் கொதிப்பித்து திரும்பவும்
,, காடியில்கழுவி யெடுத்துக்கொள்ளவும்.

காந்தசுத்தி—காந்தத்தை பழரசத்திலும் காடியிலும் மோரி
,, லும் கொதிக்கவைத்தெடுத்து பிறகு சாணி
,, நீரில் ஏழுதிரம் காய்ச்சி காய்ச்சி துவைக்க
,, வும் சுத்தியாம்.

அயத்தோட்டிசுத்தி—பசும்பாலில் நான்கு ஜாமம் நெய் தேன்
,, இவைகளில் எட்டுநாள் ஊறி யெடுத்துக்
,, கொள்ளவும்.

தோட்டிசுத்தி—நாலும் முலைப்பால் வெள்ளாட்டுப் பாலி
,, லும் தனித்தனி பத்துநாழிகை ஊரவைத்து
,, யெடுத்துக்கொள்ளவும்.

தோட்டிபாஷாணம்—துண்டு துண்டாய் நருக்கி கிளிக்கட்டி
,, நெல்லில் அவித்து யெடுத்துக்கொள்ளவும்.

போன்னிமிளை—பொன்னிமிளையை மூன்றுநாள் காடியில்
,, ஊரியபின் கிருஷ்ணு அபிரேக்குதூள் ஒருபடி
,, யெடுத்து மூணுபடி கோமியத்தில் வேகவைத்
,, தெடுத்து உலர்த்தி நெல்லு சேர்த்து கிளிக்
,, கட்டி காடியில் தோய்த்து யிரங்குந் தெளிவை
,, நீக்கி உணர்த்திக் கொள்ளவும்.

சகஸ்திரபேதிசுத்தி—நாரத்தங்கா ரசத்தில் ஊரவைத்து
,, யெடுத்துக்கொள்ளவும்.

செங்கோட்டைசுத்தி—ஜெலத்தில் ஊரவைத்து மறுநாள்
,, மூக்கைவெட்டி நீக்கி யெடுத்துக்கொள்ளவும்.

சிவதைசுத்தி—பசும்பாலில் அவித்து யெடுத்து உணர்த்தி
,, வைத்துக்கொள்ளவும்.

அமுக்கிராசுத்தி—ஆவின்பாலிலவித்து எடுத்துக் கொள்ள
,, வும்.

சுக்குசுத்தி—மேல்தோல்சீவி சுண்ணும்புபூசி உலர்த்தி யெடு
,, த்துக்கொள்ளவும்.

மிளகுசுத்தி—புளித்தமோரில் மூன்றுநாள் ஊரி ஒட்டில்
,, வருத்தெடுத்துக் கொள்ளவும்.

திப்பிலிசுத்தி—திப்பிலியை பழரசத்தில் ஊரியெடுக்கவும்.

ஓமம்சுத்தி—ஓமத்தை சுண்ணும்பு தெளிவு நீரில் ஒருஜாமம்
,, ஊரவைத்து உலர்த்தியெடுக்கவும்.

இருசீரகம்சுத்தி—சீரகம்கருஞ்சீரகம் இதுகளை சுண்ணும்பு
,, நீரில் ஏழுஜாமம்வூரி உலர்த்தியெடுக்கவும்.

ஊமத்தின்விரைசுத்தி—ஊமத்தன் விரையை ஒருஜாமம் ஜெலத்தில் ஊரவைத்து எடுத்துக்கொள்ளவும்.

எட்டிக்கோட்டைசுத்தி—எட்டிக்கொட்டையை நெல்லில்
,, அவித்து சிறுகீரை ரசத்தில் ஒருஜாமம் ஊரிய
,, பின் தேத்தாங்கொட்டைரசத்தில் வேவித்து
,, யெடுத்துக்கொள்ளவும்.

கோம்பரக்குசுத்தி—நல்ல ஜெலத்தில்போட்டு அடுப்பில்
,, வைத்து யெரித்தெடுக்கவும் இப்படி மூன்று
,, தபா யெரித்தெடுத்துக் கொள்ளவும்.

மாசிக்காசுத்தி—பசும்நெய்யில்வருத்து வெடித்தபிறகு யெடுத்
,, துக்கொள்ளவும்.

எண்ணெய்சுத்தி—சகலவித எண்ணெய்களும் நல்லஜெலத்
,, தில் விட்டு நாலுநாழிகைசென்று யெடுத்துக்
,, கொள்ளவும்.

அமுக்குராவேர்சுத்தி—ஆவின்பாலில் கொஞ்சம் அவித்து
,, யெடுத்துக்கொள்ளவும்.

இன்னு மனேக முறைபாகங்களை இரண்டாங்
காண்டத்தில் வெளியிட்டிருக்கின்றோம்.

உ
தேவிசகாயம்.

இரண்டாவது

மாத்திரை வகைபாணி.

பேதிக்கி பகிரி மாத்திரை.

ரசம்	பலம்-வ
நெல்லிக்காகெந்தகம்	,, வ
வங்காரம்	,, வ
சுத்திசெய்தநேர்வாளம்	,, வ

இந்த நான்கையும் இளநீர்விட்டு அறைத்து குண்டு மணிப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி புட்டியில் வைத்துக்கொள்ளவும் (கூ) மாதத்து குழந்தைகட்கு ஒரு மாத்திரை முலைப்பாலில் உரைத்துக்கொடுக்க நாலு திரம் பேதியாகும் ஒருவயது குழந்தைகட்கு இரண்டுமாத்திரை கொடுக்கலாம் அல்லது (கஉ) மாத்திரையாம் பெரியவர்களுக்கு தேனில் மூன்று மாத்திரை கொடுக்கலாம் மிளகு நீர்சாதஞ் சாப்பிடவும்.

சுரத்திற்கு இஞ்சிசுரசத்தில் ஒரு மாத்திரை பெரியவர்களுக்கு இரண்டுமாத்திரை கொடுக்கவும், பத்தியம் அரையுப்பு புளியும் முருங்கை கத்திரிப்பிஞ்சு சேர்த்துக் கொள்ளவும்.

இராத்திரிபேதிக்கு.

வாளம்	பலம்-வ
பூரம்	,, வ
ரசபஸ்பம்	,, வ

இரசபஸ்பம் செய்ய சாத்தியப்படாவிட்டால் மருந்துக் கடையில் (கால்மல்) யென்று கேட்டால் கொடுப்பார்கள் அதைவாங்கிவந்து மற்றமூன்று தினுசையும் ஒன்ருய்க்

கல்வத்திலிட்டு ஒருபிடி சாதம்போட்டு அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் இராத்திரியில் சாதஞ்சாப்பிட்டு படுக்கும்போது கொஞ்சம் சாதத்தில் முழுமாத்திரையாக திரேகத்திற்குத் தக்கினவாறு ஒன்று அல்லது 2-மாத்திரை வைத்து முழுங்கிவிடவும் மூன்ருவது ஜாமமுதல் பேதியாகும் திரேகத்திற்கு அனுப்பிராது காலையில் சூப்புசாதம் சாப்பிடவும்.

பேதிமாத்திரை.

சுக்கு	லிங்கம்
திப்பிலி	பூரம்
மிளகு	வாளம்

இந்த ஆறுதினுசுகளில் வாளத்தைமாத்திரம் உஉ-பலம் யெடுத்துக்கொள்ளவும், மற்ற ஐந்து தினுசுகளேயும் சமமாய்க்கலந்து ஐந்துங் உட்பட (கவ) பலம் நிறுத்து ஆறு வகையும் ஒன்றுபட கல்வத்திலிட்டு (ருறுய) எலுமிச்சம் பழரசம்விட்டு அரைக்கவும் ரசம் கொள்ளாவிட்டால் அப்போதைக் கப்போது உலர்த்தி பிறகு சார்விட்டு அரைத்து இப்படியே ஷை ரசம் பூர்த்தியானபிறகு மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக் கொள்ளவும் வெந்நீரில் இரண்டு மாத்திரைசாப்பிட பேதியாகும்.

(பத்தியம்) கத்திரி, முருங்கை, அவரை, இரைச்சி, சூப்பு ஆகும், அந்தியில் மிளகு, சுக்கு, கியாழம் பேதியதிகமானல் மோர்சாதஞ் சாப்பிடவும்.

சுகபேதிமாத்திரை.

நல்ல ஜெலத்தில்ஊறிய கோதிமிரவை	பலம்-	கவ
சுத்திசெய்து முளை நீக்கியவாளம்	,,	வ
பூரம்	,,	வ
சுக்குத்தூள்	,,	வ

அளந்து பழகின மண்பாத்திரத்திலிட்டு அதில் ஷை பாவக் காயைப்போட்டு அடுப்பேற்றி பால்வற்றுமளவும் எரித்து பிறகு பாவக்காயையெடுத்து ஆரவைத்து பாஷாணத்தை யெடுத்துக்கொண்டு ஜாதிலிங்கத்தை பாஷாணத்திற்குக் கவ சமாய்ப்பூசி வைத்துக்கொண்டு வேறுபாவக்காய் கொண்டு வந்து யிடித்து சார்பிழிந்து அந்தச்சாற்றினால் கவசித்திருக் கும் மருந்தை ஒருஜாமம் அரைத்து மிளகுபிரமாணம் மாத் திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் (இதற்கு அனுபானம்) சீதசுரத்திற்கு வெந்நீரில் ஒருமாத்திரையிட வும், குளிர்சுரத்திற்கு இஞ்சிசுரசத்தில் ஒரு மாத்திரையிட வும், ஜன்னிசுரத்திற்கு முலைப்பாலில் இரண்டுமாத்திரையிட வும் பத்தியம் உப்பு புளி தள்ளவும்.

ஜுரபாணி அல்லது முறைக்காய்ச்சலுக்கு.

சங்குபாஷாணம் அல்லது வெள்ளை பாஷாணத்தைக் கொண்டுவந்து துண்டுதுண்டாய்ப் பொடித்து பெரிய பாவக் காயைக்கீறி விரைநீக்கிவிட்டு அதனுள் இந்தபாஷாணத்தை வைத்து நூல்சுற்றி சீலைமூடி செம்மண் கவசம்செய்து (ரு) வரட்டியில் புடம்போடவும் மேல்துணி சாம்பலானபிறகு மருந்தை யெடுத்து சாம்பலை தட்டிவிட்டு அந்த பாவக்கா யுடன் கல்வத்திலிட்டரைக்கவும் இளகாவிட்டால் வேவித்த பாவக்காய் சாறுவிட்டு அரைத்து சிறு சுண்டக்காயளவாக உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக் கொள்ளவும் (இதற்கு அனுபானம்) ஒருமாத்திரை வாயில் போட்டுக்கொண்டு மிளகு கியாழஞ் சாப்பிடவும் இச்சா பத்தியம்.

காய்ச்சலுக்கு குங்குமப்பூ மாத்திரை.

குங்குமப்பூ	ஜாதிக்காய்
சுக்கு	கிராம்பு
திப்பிலி	ஏலம்
மிளகு	சந்தணத்தூள்

கடுக்காய்	தேவதாரம்
தான்றிக்காய்	கடுகுரோகணி
நெல்லிக்காய்	கோரோசனை

இந்தப் பதினன்குவகையில் முதலாவது குங்குமப்பூ பலம்-க, கடைசியிலுள்ள கோரோசனை பலம்-வ, மற்றதினுசுகள் வகைக்கி அரைபலமாக வாங்கி சகலமும் ஒன்றுபடுத்தி எலுமிச்சம்பழரசத்தில் ஆறுஜாமம் அரைத்துப் பிறகு இஞ்சிரசத்தில் நாலுஜாமம் அரைத்து பிறகு கண்டங்கத்திரி பழரசத்தில் இரண்டுஜாமம் அரைத்து சிறுபயறு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக் கொள்ளவும் காய்ச்சலுக்குத் தக்கவாறு தேன் முலைப்பால் இப்பேர்க்கொற்ற அனுபானங்களிலிட சீதளம் வறட்சி முதலானவைநீங்கும்.

சகல காய்ச்சலுக்கும் லிங்க மாத்திரை.

லிங்கம் (கவ) விராகனிடை, திப்பிலி (உ൦) விராகனிடை பசும்பாலில் ஒருஜாமம் அரைத்து பயரளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் வேண்டிய போது உலர்ந்த இஞ்சிகியாழத்திலிட சகலகாய்ச்சலும் நீங்கும். பத்தியம் சுட்டபுளி வருத்தவுப்பும் கூட்டவும்.

கோரோஜன மாத்திரை.

கோரோஜனம்	ஜாபத்திரி
சூதம்	கருஞ்சீரகம்
கற்பூரம்	ஜாதிக்காய்
திப்பிலி	ஓமம்
லவுங்கம்	அதிமதுரம்
கோஷ்டம்	அக்கிராகாரம்
நன்னாரிவேர்	மிளகு

மேற்கண்ட தினுசில் கோரோசனை பலம்-வ, மற்ற தினுசுகள் வகைக்குப் பலம் அரிக்காலாக வாங்கி மணத்தக்காளி

ரசத்தால் ஒருஜாமம் அரைத்து பயறுபிரமாணம் மாத்திரை செய்து தேனில் ஒரு மாத்திரை யிழைத்துக் கொடுக்க சுரம் சீதளம் கபங்கள் தீரும் இச்சாபத்தியம்.

ஜன்னி முதலானதற்கு ஆநந்த பயிரவமாத்திரை.

நாவிக்கிழங்கு	கெந்தகம்
சூதம்	ஜாதிலிங்கம்
மனோசிலை	வெண்காரம்

இந்த தினுசுகள் வகைக்கி விராகனிடை-க. வாங்கி எலு மிச்சம்பழரசத்தில் இரண்டுஜாமம் அரைத்து சிறு பயரளவு மாத்திரைசெய்து வைத்துக்கொள்ளவும் ஜன்னிக்கு முலைப் பாலிலும், குளிர் சுரத்திற்கு இஞ்சிச்சாற்றிலும் கொடுக்கத் தீரும்.

கஸ்தூரி மாத்திரை.

கஸ்தூரி	ஏலக்காய்
குங்குமப்பூ	கற்பூரம்
கோரோஜனை	ஜாதிக்காய்
பச்சைகற்பூரம்	ஜாபத்திரி
லவுங்கம்	மிளகு
வால்மிளகு	திப்பிலி

மேற்கண்ட தினுசுகளில் கஸ்தூரிமாத்திரம் இரண்டு விராகனிடை மற்றதெல்லாம்வகைக்கி ஒரு விராகனிடையாக வாங்கி லவுங்கம் கியாழத்தில் அரைத்து சிறுபயறு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி புட்டியில் வைத்துக் கொள்ளவும் தோஷம், நாவரட்சி, ஜலுப்பு, தலைபாரம் இவை களுக்கு முலைப்பாலிலிடத் தீரும், இச்சாபத்தியம்.

கட்டுவாதிமாத்திரை.

குரோசாணி	ஓமம்	அதிவிடையம்
ஜாதிக்காய்	ஜாபத்திரி	கிராம்பு
திப்பிலி	அபினி	

இதுகளை சமனிடையாய் நிருத்தெடுத்து குப்பைமேனி சாற்றிலரைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு பொன்முசுட்டைவேர் கியாழத்தில் ஒரு மாத்திரையிடவும் இப்படி மூன்றுவேளை கொடுக்கத்தீரும்.

கட்டுவாதி மாத்திரை.

ஜாதிக்காய்	அதிமதுரம்
ஜாபத்திரி	அதிவிடையம்
மாசிக்காய்	இலவு
கிராம்பு	விளாம்பிசினி
கோஷ்டம்	

வகைக்கி சமனிடையாய் நிருத்தெடுத்து அரைத்து மாதளங்காய்க்குள்வைத்து வெள்ளைசீலைசெய்து சாணிஅப்பி (ரு) அல்லது (கூ) காட்டெருவில் புடம்போட்டு வெந்தபிறகு எடுத்து சீலை முதலானதும் நீக்கி கல்வத்திலிட்டு அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் ஒரு மாத்திரை தயிர் வடிகட்டி அதில் கொடுக்கவும், அதிசாரபேதிக்கு தேனில் கொடுக்கவும், இச்சாபத்தியம்.

பூபதி குளிகை.

நாபி	சூதம்	தாரம்	கெந்தி
சுக்கு	திப்பிலி	மிளகு	காயம்

இவைகள் சமபிடையாய்ச் சேர்த்து சித்திரமூல கியாழத்தால் ஏழுநாள் அரைத்து மிளகுபிரமாணம் மாத்திரை செய்து தேன் அல்லது இஞ்சிரசத்திலிட ஜன்னி, சுரதோஷம், வாதம் வாய்வு, குன்மம், நாவரட்சி, க்ஷயகாசம், மேகம் இவைகள் தீரும்.

லவுங்காதிமாத்திரை.

பூரம்	லிங்கம்	வங்காரம்
லவுங்கம்	வாளம்	

இதுகளில் லவுங்கம் விராகனிடை - வ, வாளம் விராகனிடை-சு, மற்ற மூன்று தினுசுகளையும் ஒவ்வொரு விராகனிடை வாங்கி எலுமிச்சம்பழரசம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சுரத்திற்கு இஞ்சிசுரத்தில் கொடுக்கவும் ஜலுப்பு முதலானதற்கு தேன் அல்லது முலைப்பாலிலும் சம்பந்தப்படுத்தி சாப்பிடத் தீரும்.

சீவசஞ்சீவிக்குளிகை.

சுக்கு	சித்திரமூலம்வேர்பட்டை
திப்பிலி	சீந்திற்கிழங்கு
கடுக்காய்	சேராங்கொட்டை
தான்றிக்காய்	வாய்விளங்கம்
வசம்பு	நாவி

இவைகளை சமயிடையாய் தூக்கி கல்வத்திலிட்டு கோசலம் விட்டரைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி புட்டியில்போட்டு வைத்துக்கொள்ளவும் (இதற்கு அனுபானம்) அஜீரணத்திற்கு ஒரு மாத்திரை, வாந்திபேதிக்கு இரண்டுமாத்திரை, பாம்பின் விஷத்திற்கு மூன்று மாத்திரை, ஜன்னிபாதத்திற்கு நான்கு மாத்திரையாக திரேகதிடமறிந்து இஞ்சிச்சாற்றிலிடவும்.

தாபசுரத்திற்குமாத்திரை.

ரசம்	விராகனிடை	-க
கெந்தி	,,	உ
அரிதாரம்	,,	ங
மனோசிலை	,,	க
ஜாதிலிங்கம்	,,	ரு
வெண்காரம்	,,	சா
கடுகுரோகணி	,,	எ
சுத்திசெய்தவாளம்	,,	அ
நாபி	,,	க

இவைகளெல்லாம் எலுமிச்சம்பழச்சார்விட்டு அரைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் இஞ்சிச்சாற்றில் கொடுக்கவேண்டியது.

கிராணி கழிச்சலுக்கு.

அபினி	இலவங்கம்
ஜாதிக்காய்	அதிவிடையம்
கிராம்பு	சுக்கு

வகைக்கு (கவ) விராகனிடையாக யெடுத்து மாதுளம் பிஞ்சி இரண்டு எண்ணெய்வார்த்து சுருக்கி ஷை தினுசுகளுங் கூட்டி தயிர்வார்த்து அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து தயிரில் மூன்றுநாள் கொடுக்கத்திரும்.

மகாபோகக்குளிகை.

தங்கரேக்கு	விராகனிடை	க
கஸ்தூரி	,,	க
கோரோஜனை	,,	எ உ
பச்சை கற்பூரம்	,,	ரு
குங்குமப்பூ	,,	ரு
மயில்ரோஜனம்	,,	க
படிகாரச்சுன்னம்	,,	உ

இவைகளை ஈசுரமூலிகைரசத்தால் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு இரவில் புளிநீக்கி போஜனஞ்செய்த பிற்பாடு ஒரு மாத்திரை சாப்பிட்டு உடனே (ரு) பலம் பசும்பால் சாப்பிடவும் போகத்திற்கு முயலுங்கால் அதிக உல்லாசமும் மனக்களிப்பும் உண்டாம் சகல சீதளசுர ஜன்னிகளும் நீங்கும்.

மகாகோடாசூழி மாத்திரை.

தாளகம்	வீரம்	பாஷாணம்
கெவுரி	லிங்கம்	சூதம்

கெந்தி	தூரிசி	வெண்காரம்
அன்னபேதி	பால்துத்தம்	மனோசிலை
செம்புதொட்டி	படிகாரம்	வாளம்

இவைகளை சுத்திசெய்யும் முறைப்படி செய்து தினுசுக்கு (கவ) விராகனிடையாக யெடுத்து ஒரு யேனத்தில் வைத்துக் கொள்ளவும்.

திரிகடுகு	திரிபலாதி	வசுவாசி
தேவதாரம்	கிராம்பு	ஜாதிக்காய்
ஜாபத்திரி	கோஷ்டம்	கடுகுரோகணி
சித்திரமூலம்	குரோசாணிஓமம்	கஞ்சாவேர்
மந்திஷ்டி	சிறுநாகல்பூ	வலம்புரிக்காய்

இவைகளை பொன்வரலாக வருத்து சூரணித்து வஸ்திர காயஞ்செய்து தினுசுற்கு (கவ) விராகனிடையாக யெடுத்து ஒருயேனத்தில் வைத்துக்கொள்ளவும்.

மேற்படி தினுசுகளுடன் பச்சைகற்பூரம், இந்துப்பு காயம், சந்தனத்தூள், பேரீச்சங்காய், திராட்சி, பூண்டு இது கள் வகைக்கி (கவ) விராகநிடையாக யெடுத்து சகல தினுசு களும் ஒன்ருய்க்கூட்டி கல்வத்திலிட்டு கரிச்சாலை ரசத் தினுல் ஏழுநாளரைத்து பிறகு நொச்சி ரசத்தினுல் ஏழுநாள ரைத்து பின்பு விஷ்ணுகிரந்தை ரசத்தினுல் ஏழுநாள் அரைக்கவும், இப்படி (உக) நாளும் அரைத்தானபிறகு பயறு பிரமாணம் மாத்திரைகள் செய்து புட்டியில் போட்டு வைத்துக்கொள்ளவும்.

(இதற்கு அனுபானம்) வெட்டைக்கி அருகன்வேர் கியா ழத்திற் கொடுக்கவும், விஷத்திற்கு பழரசத்தில் அரைத்துப் பூசவும், தேளுக்குக் கடிவாயில்தடவி கலிக்கமிடவும், சுகஜன் னிக்கு இஞ்சிரசத்தில் கொடுக்கவும், தாகத்திற்கு சர்க்கரை யில் உள்சுரத்திற்கு மோர், பித்த சிலேற்பனத்திற்கு இஞ்சி, முரைக்காய்ச்சலுக்கு முடக்கொத்தான் கியாழத்தில், விஷ வாதம் காமாலை சோகை பித்தங்களுக்கு வேப்பிலை தாணிக் கா, மிளகு, சுக்கு, பசுங்கோமியத்தில் கொடுக்கவும், அண்ட வாதத்திற்கு பூலாச்செடிதூளும், அமுக்குரூத்தூளூங் கூட்டி

கொடுக்கவும். மாலைக்கண் குருடு காசத்திற்கு கையான் ரசத்திலும் எலுமிச்சம்பழ ரசத்திலும் கலிக்கமிடலாம். மூலகிராணிக்கு சர்க்கரையில், நஞ்சு தின்றவர்களுக்கு கருவூமத்தின் ரசத்தில், (அச) வாதத்திற்கும் மாவிலிங்கம் ரசத்தில், அஷ்ட குன்மம் தசவாய்வு விப்புருதிகாசம் சுவாசகாசம் பீலிகை நீராம்பல் கோவை அடிவயறு வீக்கம் மந்தாரகாசம் (கூசு) சிலேற்பனத்திற்கும் தும்மட்டிக்காய் ரசத்தில், முசல்வலிக்கு ஊமத்தன் ரசத்தில் நசியமிடவும். கபாலகுஷ்டம் கிரந்தி சூலை சில விஷம் கடிவிஷம் வாய்நீரொழுகளுக்கு திரிகடுகு தூளில், பாதசக்கரம் பாதபுத்திற்கு ஜாதிக்கா தயிலத்திலிழைத்துவிடவும்.

அண்டவாத மாத்திரை.

ஒருபலம் பூரத்திற்கு பால்நண்டை யிடித்து ரசமெடுத்து நாலுஜாமம் சுருக்குகொடுத்து உத்தாமணிவேர் பட்டை ரசத்தினுல் மூன்றுஜாமம் சுருக்குகொடுத்து ஷை ரசத்தால் அரைத்து பயறுபோல் மாத்திரைசெய்து முத்தெண்ணெயில் ஙனைத்து (உய) நாள் சாப்பிடவும். இச்சாபத்தியம். இதற்கு முதல்நாள் பேதிக்கு சாப்பிடவேணும் ஆகையால் கழற்சிவேர் ஙூ-பலம் எடுத்துயிடித்து கியாழம் வடித்து மிளகுரசஞ்செய்து முத்தெண்ணெய் பலம்-க, விட்டு சாப்பிட்டுவிட்டு மறுநாள் முதல் ஷை மாத்திரை கொள்ளவும்.

சகல சுரத்திற்கும் சுராங்கிஷ மாத்திரை.

இரசம்	நெல்லிமுள்ளி
கெந்தகம்	கடுக்கா
அரிதாரம்	காந்தம்
வெங்காரம்	மிளகு
அக்கராகாரம்	திப்பிலி

இதுகள் வகைக்கி ஒருவிராகனிடையாக வாங்கி கல்வத்திலிட்டு வாளம் பத்துவிராகனிடைகூட்டி முசுமுசுக்கை ஆடாதோடை கண்டங்கத்திரி யெலுமிச்சம்பழரசம் இதுகளினுல் ஒவ்வொருநாளைக்கி ஒருவகை ரசம்விட்டு அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து இஞ்சிசுரசம் தேன் முலைப்பால் இதுகளில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்க சர்வசுரமுந் தீரும் (ரு) நாள் ஆறுவேளை கொடுக்கவும் புளியாகாது.

சுராங்கிஷ சுருக்குமாத்திரை.

கெந்தகம் ரசம் சமனிடையா யெடுத்து எலுமிச்சம் பழச்சார்விட்டு இரண்டுஜாமம் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து இஞ்சி ஓமம் சீரகம் இந்தக் கியாழங்களில் ஒரு மாத்திரை கொடுக்கவும். மேக அனல் ஊஷ்ணக் காய்ச்சல் மற்ற சுரமும் தீரும். புளியாகாது.

மத்தியான மாத்திரை.

இரசம், உலர்ந்தலிங்கம், கெவுரிபாஷாணம், தொட்டி பாஷாணம், துத்தம், துரிசி வகைக்கு விராகனிடை-க, கெந்தகம் விராகனிடை-ரு, இவைகளைக் கையாந்தகரைச் சார்விட்டு இரண்டுஜாமம் அரைத்து பயறு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சகல சுரத்திற்கும் முலைப்பால் அல்லது சுக்கு கியாழத்தில் ஒரு மாத்திரை கொடுக்கவும். மத்தியானத்தில் சுரம்விடும். புளி புகை தள்ளவும். நல்லெண்ணெய் ஒருமாதம் வரையில் ஆகாது, தலைமுழுகவேணுமானுல் விளக்கெண்ணெய்தேய்த்து முழுகவும். சரீரம் வீக்கம்கண்டால் சிறுகீரை வேராவது பருத்திவேராவது வேவித்து தண்ணீர் கொடுக்கவும். வாய்வெந்தால் மிளகை வேகவைத்து அந்த தண்ணீர் யிருத்துக்கொடுக்கவும்.

ஊழிமாத்திரை.

பூரம்லிங்கம் பொருந்துநற்கெந்தகம்
ஆரும்பத்திரி கிராம்புவசம்புபின்
சாருங்கற்பூரம் சாம்பிராணிஜாதிக்கா
நேரும்பூண்டு விடையநீள்சுக்கிடே. (௧)

சுக்குதிப்பிலி சோம்புடனேமமும்
பக்குவங்கரி யோமமுங்கோரக்கர்
முக்கியமூலிவெண் காரஞ்சமன்கொடு
நக்கனார் பதம் நாடித்துதித்திடே. (௨)

துதித்துக்கல்வத்தி லிட்டுசூரந்தவர்
மதித்தவஸ்துவால் வாகாயரைத்ததை
விதித்தகடலையின் வீதமுருண்டையாய்
பதித்தென்னம்மையின் பாதம்பணிந்திடே. (௩)

எடுத்தஊழியா லெய்திடும்பேதிக்கே
வடித்தசுத்தநீர் தன்னிலோர்மாத்திரை
கொடுத்துகோதுமை கஞ்சிகொடுத்திட
எடுத்தஊழிக்கி ஈதூழியாகுமே. (௪)

மாத்திரைவகைபரணி.

முற்றுப்பெற்றது.

இன்னும் அள்விரந்துள்ள மாத்திரை பாகங்களை பின்வரும் இரண்டாங்காண்டத்தில் வெளியிட்டிருக்கின்றோம்.

உ

தேவிசகாயம்.

மூன்றாவது.

கட்டுவகைபாணி.

லிங்கக்கட்டு.

சிறுலிங்கம் ஒருபலம்வாங்கி சேராங்கொட்டை (டரு) பலமெடுத்து துண்டு துண்டுகளாக வெட்டி ஒரு சட்டியில் பாதிபோட்டு அதின்மேல் லிங்கக்கட்டியை வைத்து மற்ற பாதி கொட்டையைப்போட்டு லிங்கந்தெரியாமல் மூடி அடுப்பிலேற்றி எரிக்கும்போது விளக்கைக்காட்டினால் திக் கென்றெரியும் அனல் அடங்கியபிறகு லிங்கக்கட்டியை எடுத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு தேனில் உரைத்துக் கொடுக்கலாம். பத்தியம் புளி கூடாது. அந்த லிங்கக்கட்டியில் பாதி உடைத்து கல்வத்தில் பொடித்து வைத்துக்கொள்ளவும். இதற்கு லிங்கசெந்தூரமென்று பெயராம். பலவித சுரங்களுக்கு அரிசி பிரமாணம் தேனிற் கொடுக்கலாம்.

வேறுவகை லிங்கக்கட்டு.

ஜாதிலிங்கம் (ரு) விராகனிடை கொண்டுவந்து முலைப்பாலில் ஒருஜாமஞ் சுருக்குக்கொடுத்து எலுமிச்சம் பழ ரசத்தில் ஒரு ஜாமஞ் சுருக்குக்கொடுத்து மணத்தக்காளி சாற்றிற் ஒருஜாமஞ் சுருக்குக்கொடுத்து எடுத்துப்பார்க்கக் கட்டும். ஜன்னி சுரந் தலைவலி இதுகளுக்கு முலைப்பாலில் உரைத்துக்கொடுக்கலாம். சீதளஜலுப்பு இதுகளுக்கு தேனில் உரைத்துக்கொடுக்கவும். பத்தியம் அரைபுளி இச்சாபத்தியம்.

வன்னிகெற்பமாகிய லிங்கக்கட்டு.

ஒருபலம் லிங்கத்தை தேன் முலைப்பாலில் மூன்று நாள் ஊரவைத்தெடுத்து ஒருபலம் நெல்லிக்காகெந்தகத்தை ஆலம்

பால்விட்டு நன்றாய் ரேகிக்க யிடித்து லிங்கத்திற்கு கவசஞ் செய்து உலர்த்தி சிறுகுழியில்வைத்து அதன்மீது மணல் பரப்பி மறைத்து சூடுபடும்படியாக இரண்டுவரட்டியால் புடம்போடவும். ஆறினபிறகு எடுத்து மேல்கவசமிட்ட கெந்தகத்தை நீக்கி வேறேகெந்தகம் ஒருபலங் கொண்டு வந்து முன்மாதிரியாய் பாலிலிடித்து கவசித்து குழியில் வைத்து மணல்பரப்பி ஒருவரட்டி அதிகப்படுத்தி புடம் போடவும். இப்படியே ஒவ்வொருதடவையும் புதுகெந்தகம் கவசித்து ஒவ்வொருவரட்டி அதிகப்படுத்தி (௬) தடவை புடம்போட்டெடுத்து முடிவில் முன்மாதிரியாக கெந்தகம் கவசஞ்செய்து நாலுசீலைமண்செய்து பூமியில் பத்துவரட்டி யில் புடம்போட்டுயெடுத்து சகலவாய்விற்கும் சீதளசுரம் ஜன்னி இவைகளுக்குந் தேன் இஞ்சி ரசத்தில் யிழைத்துக் கொடுக்கவும்.

வீரக்கட்டு.

வேண்டியமட்டும் வீரத்தைக் கொண்டுவந்து சாம்பி ராணி விராகனிடை-க, நெல்லிக்காகெந்தகம் விராகனிடை-க, இரண்டுந் தூள்செய்து கரண்டியிலிட்டு அனல்பிடிக்க உருகி வருஞ்சமயத்தில் வீரத்தைப்போட்டுப் புரட்டி எடுத்துக் கொள்ளவும் ஜன்னி வாய்வுகளைக்கேட்கும் இதுபோல லிங்கத் தையுங் கட்டிக் கொள்ளலாம்.

பூரக்கட்டு.

சீனாபூரம் ஒருபலம் வாங்கி முலைப்பாலில் மூன்றுநாள் ஊரவைத்தெடுத்து உலர்த்தி ஒரு சட்டியில் துளசிரசம் பிழிந்து அதில் பூரத்தைவைத்து அடுப்பேற்றி சிறுதீயாக அந்த ரசஞ் சுண்டுகிறவரையிலும் யெரித்தெடுத்தால் அது கட்டும்.

ரசகற்பூரக்கட்டு.

நாலுவிராகனிடை ரசகற்பூரத்திற்கு முலைப்பால் நண் டையிடித்து சாறுபிழிந்து இரண்டுஜாமஞ் சுருக்குக் கொடுத் துப் பிறகு முசுமுசுக்கைச் சாறுபிழிந்து இரண்டுஜாமஞ் சுருக்குக் கொடுக்கக்கட்டும்.

துருசுசுன்னத்தில் லிங்கக்கட்டு.

நிலையாவாரையிலையை துவைத்து சிறுபிள்ளை சிறுநீர் விட்டு சாறுபிழிந்து ஒருகோப்பையில் பெரிய கட்டியாக துரிசி எடுத்து சினகாரத்தை நீரிலரைத்து கவசித்து கோப் பையில் வைத்து துருசுமுழுக ஷை சாற்றைவிட்டு ஏழுநாள் வெய்யலில் வைக்க சாறுவற்றிப்போகும் பிறகு கருப்பு வெத்திலைச்சாறுவிட்டு ஏழுநாள் வெய்யலில்வைக்க நீர்சுண்டி விடும். அந்த துரிசை யெடுத்து பசும்வெண்ணெயை தளமாய் பூசி கோப்பையைத் துடைத்து அதின் நடுவே கட்டிவைத்து ஆறுநாள் வெய்யலில் வைக்க அந்த துரிசி சுன்னமாகும் அதில் கொஞ்சமெடுத்து சப்பாத்திப்பூ நடுவிலிருக்கும் நரம் பைப்போக்கி அத்துடன் சுன்னத்தைவைத்துப் பிசைந்து ஒருஜாமம் வைத்து பிறகுயெடுத்து கம்பிளியிலாவது சீலையி லாவது வைத்துப் பிழிந்தால் தாராளமாய் சாறு இறங்கும். சாறுவாராதயிலைகளிலே சுன்னத்தைவைத்துக் கொள்ள லாம் ஷை சாற்றை ஒருபலம் லிங்கத்திற்கு மூன்றுஜாமம் சுருக்குக்கொடுத்தால் லிங்கம் மணியாகக்கட்டும் சர்வசுரம் ஜன்னி சீதளம் இதுகட்டு வைரியாம்.

வேறுவிதம் வீரக்கட்டு.

துருசு விராகனிடை-கஉ, படிகாரம் விராகனிடை-கஉ, இரண்டையும் தூள்செய்து அடுப்பில் ஓடு காயவைத்து ஷை தூளை மூன்றுபங்காக்கி ஒருபங்கை ஓட்டில் தூவி எரிகிற சமையத்தில் ஒருவிராகனிடை வீரத்தைப்போட்டுப் புரட்டி யெடுத்துக்கொள்ளவும். ஓட்டிலுள்ள சுண்டுகளை சுரண்டி யெடுத்துவிட்டு மற்றயிரண்டு பங்குதூளையும் இப்படியே செய் தெடுத்து மறுபடியும் விராகனிடைக்கி சூடத்தை கொண்டு வந்து கவசித்து கொளுத்திவிட்டால் வீரம் உருகிமணியாகும் க்ஷயம் ஜன்னி இவைகளுக்காகும்.

கட்டுவகைபரணி

முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்.

நான்காவது

பற்பவகைபாணி.

லிங்கபற்பம்.

லிங்கம் வேண்டியமட்டும் கொண்டுவந்து வைத்துக் கொண்டு வெள்ளெருக்கன் வேரில் கொஞ்சம் பொட்டிலுப்பு போட்டு இடித்து சார்பிழிந்து அந்த ரசத்தில் பாதியெடுத்து லிங்கத்திற்கு சுருக்குக்கொடுத்து மற்ற சார்விட்டு மேற்படி உப்பை அரைத்து உலர்த்தி தூள்செய்து கழுத்து நீண்ட குடுவையில் அறைக்குடுவை அந்த உப்பைப்போட்டு அதின் பேரில் லிங்கத்தைவைத்து அந்த லிங்கத்தின்மேல் உப்பைப் போட்டு நிறப்பி பத்துஎருவில் புடம்போட்டு உப்பு சிவந்த வுடன் எடுத்து ஆரவைத்து லிங்கத்தை யெடுத்துக்கொள்ள வும் (இதற்கு அனுபானம்) தேன் நெய் வெண்ணெய் இதுக ளில் பணவிடை கொடுக்க தீரும் வியாதிகள் மேகம், ரணம், கரிமேகம், தழுப்பு, வாய்வு இவையெல்லாந் தீரும். பத்தியம் இரைச்சி, பீர்க்கங்காய், முருங்கைப்பிஞ்சு, துவரை, நெய்கூட் டவும். வாய்பிடித்தால் பசும்பால் கொப்பளித்து முழுங்கவும், (௩) நாள் அல்லது (௫) நாள் சாப்பிடவேணும்.

வெள்வங்க பற்பம்.

வெள்வங்கம் நாலுபலமெடுத்து அரசம் பட்டையை யிடி த்து கோணிப்பட்டையில் வைத்து அதின் நடுவில் வங்கத் தைவைத்து சுருட்டி மண்ணிளுல் சீலை கவசஞ்செய்து (௩௰) வரட்டியில் புடம்போட்டெடுத்து கல்வத்திலரைத்து சீசா வில் வைத்துக்கொள்ளவும். இதை நெய்யில் கொடுக்க மேகம் உக-ம், நீங்கும். கடுகு, நல்லெண்ணெய், மீன், பூசினிக்காய் ஆகாது.

வேறுவித வெள்வங்க பற்பம்.

சுத்திசெய்த வெள்வங்கத்தை தகடாகச்செய்து பொடியாகத்தரித்து நொச்சியிலையை உணர்த்தி யிடித்துதூளை ஒரு கோணிப்பட்டையில் இரண்டு விரல்கனம் பரப்பி அதின்மேல் வங்கப்பொடியைத்தூவி அதின்மேல் மேற்படி மூலிகைத் தூளைத்தூவி தலையணைப்போல் சுருட்டிக்கட்டி (ரு) படி உமிமத்தியில் வைத்து நெருப்பிடவும் நன்றாய் வெந்தபிறகு எடுத்து வேகாதிருப்பவைகளை நீக்கி பற்பமாய் நீற்றிருப்பதை யெடுத்துக்கொண்டு வெண்ணெயில் உபயோகப்படுத்தவும். மேகம் வெள்ளை இதுகள் தீரும்.

கரிவங்கபற்பம்.

கரிவங்கம் நாலுபலங் கொண்டுவந்து அத்திப்பட்டை அல்லது மருதம்பட்டையை யிடித்து மேற்கூறிய கலசஞ் செய்து நூறுகை வரட்டியில் கெஜபுடம் போட்டு யெடுத்து கல்வத்திலரைத்துக்கொள்ளவும், நெய்யில்கொடுக்க வெள்ளை முதலான மேகமுந்தீரும் பத்தியம் மூன்மாதிரியிருக்கவும்.

செம்மேகத்திற்கு பேரண்ட பற்பம்.

பால்போலிருக்கும் அண்டஓட்டை பூநீரில் கொதிக்க வைத்து கழுகியெடுத்து எருமைசாணியடைத்து மத்தியில் வைத்து அரைகெஜ புடமிட்டெடுத்து இது நான்கு பாகத்திற்கு பூரம் ஒருபாகஞ்சேர்த்து வாய்நீராலரைத்து வில்லை செய் துலர்த்தி அரைகெஜ புடமிட்டு எடுத்துக்கொள்ளவும் (அனுபானம்) தேனில் பணவிடையாக அரைமண்டலங் கொடுக்க செம்மேகம் தீரும்.

சீமை கல்ஞற் பற்பம்.

கல்ஞர் ஐந்துபலம்கொண்டுவந்து துண்டுதுண்டாக யிடித்து புதுக்குடுவையில் போட்டு யெலுமிச்சம்பழச் சாறுவிட்டு

நிழலில் ஊரவைத்து சுண்டின பிறகு இதேமாதிரியாய் (ரு) திரம் ஊரவைத்தெடுத்து (௬௰) வரட்டியில் புடம் போட்டு பிறகு கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ளவும், நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்க பல்நோய் மார்நோய் இதுகள் தீரும். சூடு நிவர்த்தியாகும் இச்சாபத்தியம்

கற்பூரசிலாசத்து பற்பம்.

கற்பூரசிலாசத்து பத்து களஞ்சிவாங்கி சுண்ணும்பு தளமாய்ப்பூசி (அ) வரட்டியில் புடம்வைத்தால் பஸ்பமாகும், அதின்மேலிருக்கும் சுண்ணும்பைத் தட்டிவிட்டு கல்வத்திலரைத்து யெடுத்துக்கொள்ளவும், இதை நெய்யில் கொடுத்தால் சகல மேகம் வாய்வு சூடு நீங்கும், இச்சாபத்தியம்.

வெள்ளைக்கு இருமலுக்கு படிகார பற்பம்.

சிறிய மண்குடுவையில் ஒருபலம் பசும் வெண்ணெயை விட்டு அதின் மத்தியில் ஒருபலம் படிகாரம் ஒரே கட்டியாக அதன் நடுவில் யிறங்க சொரிகிவைத்து வாய்புரம் ஓடுமூடி சீலைமூன்று செய்து (ரு) வரட்டியில் புடம்போடவும் நீர்த்து பஸ்பமாயிருக்கும், அதை வெண்ணெயில் மிளகுயிடை குழைத்துக் கொடுக்க மூன்று நாள் ஆறுவேளையில் வெள்ளை நீர்க்கடுப்பு இதுகள் நீங்கும், மூன்று குன்றியிடை பஸ்பத்தை முசுமுசுக்கையிலை மூன்றில் பத்தியாய் அடுக்கி மடித்து சாப்பிட இருமல் தீரும், (எ) நாள் சாப்பிடவும் தினம் ஒரு யிலை அதிகப்படுத்தவும்.

வீரபற்பம் பச்சைவெட்டு.

வீரம் இரதம் பொரிகாரம் இந்த மூன்றும் சமயிடையா யெடுத்து அரைத்து பனவெல்லத்தில் ஒரு பணவிடை பற்பம் வைத்து சாப்பிட புண், வெள்ளை, கிரந்தி, கட்டி, சூலை, சூதகவாய்வு, விஷக்கட்டி, மலக்கட்டு இதுகள் தீரும் (௩) நாள் ஆறுவேளை சாப்பிடவும், வருத்தவுப்பு கூட்டவும் புளி ஆகாது.

பலகாரை பற்பம்.

பலகாரை (ரூ) பலம் வாங்கி புதிய குடுவையில் போட்டு எலுமிச்சம் பழச்சார் விட்டு கவசம் செய்து (ய) வரட்டியில் புடம்போட்டு எடுத்து கல்வத்தில் அரைத்து வைத்துக் கொள்ளவும் இதை நெய்யில் தேனில்கொடுக்க பக்கசூலை மார்நோய் வாய்வு நீங்கும், கடுகு நல்லெண்ணெய் மீன் ஆகாது.

மான்கொம்பு பற்பம்.

மான்கொம்பு அரைவீசைவாங்கி துண்டு துண்டாய் நருக்கி உடைத்து இதையும் அகத்திக்கீரையையும் பெரிய பானையில் போட்டு ஒருஜாமம் வேகவைத்துயெடுத்து பிறகு நீர் முள்ளியிலையை அறைத்து மேல்கவசஞ்செய்து சீலைமூடி (ருய) கை வரட்டியில் புடம்போட பஸ்பமாகும். கல்வத்தி லரைத்து யெடுத்துக்கொள்ளவும், நெய்யில் கொடுக்க மார் நோய், இடுப்பு நோய், நாவரட்சி, வெள்ளை, மேகம் இவை கள் தீரும், இச்சாபத்தியம்.

பவழபற்பம்.

பவழம் (ரு) பலம்வாங்கி எலுமிச்சம் பழரசத்தில் ஒரு நாள் வூரி கழுவியெடுத்து வாய் அகலமான குடுவையில் போட்டு முசல் ரத்தம் விட்டு சீலை கவசம்செய்து (ருய) கை வரட்டியில் புடம்வைத்தால் பஸ்பமாகும், கல்வத்தி லரைத் தெடுக்கவும், இதை தேனில் அல்லது நெய்யிற் கொடுக்க இருமல் நீங்கும் இச்சாபத்தியம்.

கெட்டிமுத்து பற்பம்.

ஒரு விராகனிடை கெட்டிமுத்து வாங்கி சீமைகரசணுங் கண்ணி சார்பிழிந்து சிரிய குடுவையில் போட்டு சீலை கவசம் செய்து (ரு) கைவரட்டியில் புடம்போட்டு யெடுக்கவும் நெய்யில் கொடுக்க திரேககாந்தி வீரியவிர்த்தி யுண்டாகும் இச்சாபத்தியம்.

சங்குபற்பம்.

(ரு) பலம் சங்குவாங்கி கல்வத்தில் வைத்து பிரண்டை சார்விட்டு அரைத்து (ய) பில்லையாகச்செய்து உலரவைத்து (உரு) வரட்டியில் புடம்வைக்கவும், இப்படி ஏழுதடவை அரைத்து புடம்வைத்த பிறகு கல்வத்திலரைத்து யெடுத்துக் கொள்ளவும் இதை எலுமிச்சம் பழரசத்தில் சாப்பிடவும் வாத குன்மம் நீர் சுருக்கும் விலகும், இச்சாபத்தியம்.

ஆமையோடு பற்பம்.

ஆமையோட்டை நருக்கி பச்சை கோரைக்கிழங்கை யரைத்து அதின்மேல்பூசி கவசஞ் செய்து உலர்த்தி (ருய) வரட்டியில் புடம்வைக்க பஸ்பமாகும், நெய்யில் கொடுக்க பசிதீபனம் உண்டாகும் அசீர்ணம் நீங்கும், இச்சாபத்தியம்.

கருவங்கபற்பம்.

சுத்திசெய்த கருவங்கம் ஒரு பலம் யெடுத்து தகடுதட்டி ஆவாரை சமூலம்யிடித்து ஒரு சட்டியில் பாதி அழுத்தி அதின் மேல் தகட்டை பரப்பிவைத்து மற்ற பாதியைப் போட்டுத் தளமாய் அழுத்தி மேல்சட்டிமூடி சீலை மண் செய்து கெஜபுடம் போட பற்பமாகும், இதை பசும்வெண் ணெயில் கற்கண்டு இதுகளில் கொடுக்க (உக) மேகநோய் களையும் தீர்க்கும், கடும்பத்தியமிருக்கவும்.

கல்நார்பற்பம்.

சுத்திசெய்த இரண்டு பலம் கல்நார் வாங்கி பசுங்கோமி யத்தில் (யரு) நாள் ஊரவைத்தெடுத்து கழுவி புணர்த்தி ஆவாரையிலையை அரைத்து கவசம்செய்து கெஜபுடத்தில் வைக்க பஸ்பமாகும் இந்தபற்பம் முன்சொன்ன அனுபா னங்களில் கொடுக்க சகலமேகங்களும் தீரும்.

தங்கபற்பம்.

(எ) அல்லது (அ) மாத்துள்ள பொன்வாங்கி மிக அச்சபில்லைகளாக தகடுதட்டி சிகப்பு முள்ளுக்கீரை வேரின் பட்டையை அரைத்து தகட்டின்மேல் முத்தையாகமூடி சீலை கவசம்செய்து பத்து வரட்டியில் புடம்வைத்து ஆரியெடுத்து இங்கிலீஷ் வெள்ளைக்கல்வத்தில் அரைத்தெடுத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும், இதை நெய்யில் சாப்பிட்டால் வீக்கம் வாய்வுபோம் ஷை மொத்தை ஒருவிராகனிடை தகட்டுக்கு ஒரு எலுமிச்சங்காயளவு யிருக்கவேணும்.

தாளகபற்பம்.

பச்சைதாளகம் ஒருபலம் வாங்கிகல் சுண்ணாம்பை ஜலத்தில்போட்டு தெளிந்தபிறகு ஜலத்தையிருத்து அந்த ஜலத்தினால் தாளகத்தை ஏழுநாளரைத்து பில்லைசெய்து உலரவைத்து ஒருகலசத்தில் சுண்ணாம்புநீரு நிரைய அழுத்தமாய் வைத்து அதின்மேல் இந்தபில்லையைவைத்து வேறொரு கலசத்தில் சுண்ணாம்புநீரை அழுத்தமாய் வைத்து மூடி ஏழுசீலை கவசம்செய்து சுமார் பத்து வரட்டியில் புடம்போட்டுயெடுக்க வெள்ளைபஸ்பமாகும் தேனில்கொடுக்கவும், புளி நல்லெண்ணெய் கடுகு ஆகாது.

ரசபற்பம்.

ரசம் (உ) விராகனிடையெடுத்து சிவகரந்தை சார்விட்டறைத்து பில்லைசெய்து ரவியிலுலர்த்தி ஓட்டில்வைத்து மேல் ஓடுமூடி மூன்று சீலைமண்செய்து கோழிபுடம் போட நீரும், இதை பனவெல்லத்தில் கொடுக்க கிரந்தி மேகம் வெள்ளை தீரும் இச்சாபத்தியம்.

வெள்ளிபற்பம்.

முக்காவேளையைக் கொண்டுவந்து அரைத்து எலுமிச்சங்காய் அளவு உருட்டி அதனால் வெள்ளித்தகட்டை அச்சமாகத்தட்டி சொருகி சீலைமண் கவசஞ்செய்து பத்து வரட்டியில் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளவும், தாது விர்த்திக்கி வெண்ணெயில் அரிசிபிரமாணம், மேகம் எலும்புருக்கி முதலானதற்கும் கொடுக்கலாம்.

நாகபற்பம்.

சுத்திசெய்த நாகம் (கዐ) பலம், சூதம் (௨) பலம், இரண்டையும் உருக்கி ஒன்றாகத் தொந்தித்து அஞ்சாங் காய்ச்சல் வெடியுப்பு ஒருபலம் சேர்த்து கல்வத்திலிட்டு உத்தாமணி ரசத்தால் நாலுஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி ஒட்டில் வைத்து மேலோடுமூடி சீலைசெய்து (௰உ) வரட்டியில் புடம்போட்டெடுக்கவும் (இதற்கனுபானம்) பாலில் வேக வைத்து உலர்த்திய சுக்குசூரணத்தில் பனைவெல்லம் சமமாய்ச்சேர்த்து பிசைந்தலேகியத்தில் கழற்சிக்காய்ப் பிரமாணம் எடுத்து அதின் நடுவில் ஷை பற்பத்தை குன்றியிடை வைத்து மூன்றுநாள் கொடுக்க மூலம் சீழ்மூலம் தீரும்.

தங்கபற்பம்.

தங்கரேக்கு விராகனிடை-௨, சுத்திசெய்த சித்தண்ட ஓடு விராகனிடை-க, இவ்விரண்டையும் அரைத்து உத்தாமணிபால் (௫) துளிவிட்டு பிசரி மூசையிலிட்டு ஓடுமூடி சீலைசெய்து ஒரு குண்டு சட்டியில் உமிகொட்டி அதின் மத்தியில் வைத்து தீயிட பற்பமாகும், காசரோகத்திற்கும் அதிக கொழுமையினு லடைந்த தாதுசோர்வையும் தீரும்.

பற்பவகைபரணி.

முற்றுப்பெற்றது.

இனிவரும் பற்பவகைபாகங்களில் கையாடத்தக்க உத்தமமுறைகள் இரண்டாங் காண்டத்தில் அச்சிட்டிருக்கின்றோம்.

உ

தேவிசகாயம்.

ஐந்தாவது
செந்தூரவகைபாணி.

திரிலோக செந்தூரம்.

அயப்பொடி பலம்-க, கெந்தி பலம்-உ, தங்கப்பொடி விராகனிடை-ஹ, வெள்ளிப்பொடி விராகனிடை-க, இவைகளை கல்வத்திலிட்டு கல்சுண்ணும்பு சாரமும் சமனாகக் கூட்டி நல்லஜலத்தில் கரைத்து தெளிவுநீரை யெடுத்து அந்த நீரினால் ஷை சரக்கை நாலுஜாமமரைத்து உணர்த்தி புது ஒட்டிலிட்டு அடுப்பேற்றி லேசாக வருக்கும்போது சிவந்துவரும் பதத்தில் எடுத்துக்கொண்டு தேனில் பணவிடை கொடுத்து வரவும் சோகை, வெளிரு, ஊதல், நீரேற்றம், பசிமந்தம், வாய்வு இவைகள் தீர்ந்து ரத்தவிர்த்தியாகும்.

அன்னபேதி செந்தூரம்.

அன்னபேதி (ய) விராகனிடைவாங்கி புளிச்சத் தண்ணியில் ஊரவைத்து கல்வத்திலிட்டு (ரு) எலுமிச்சம் பழரசம் விட்டரைத்து பில்லை செய்து உலரவைத்து ஒட்டில் வைத்து மேலோடுமூடி ஒருசீலைமண்செய்து பத்து வரட்டியில் புடம்போட்டு எடுக்கவும், அதைதேனிலிட மேகவாய்வு, மார்புநோய் நீங்கும் பசியுண்டாம்.

வேறு அன்னபேதி செந்தூரம்.

மான்செவிக்கள்ளியிலை ரசத்திலரைத்து பில்லை தட்டி (ய) எருவில் புடமிட்டெடுக்கவும் தேள்கடி வாய்வு வீக்கந் தீரும்.

ராமபாண செந்தூரம்.

வீரம், பூரம், ரசம், லிங்கம், ரசச்செந்தூரம், நெல்லி கெந்தகம், வகைக்கிக் களஞ்சிவீதம் யெடுத்து முலைப்பாலில்

(ச) ஜாமம் அரைத்து வெய்யலில் வைத்தால் செந்தூரமாகும் எடுத்துக்கொண்டு பனவெல்லத்தில் அரிசியிடை கொடுக்க வும் இச்சாபத்தியம் வாய்வு, வீக்கம், சுரம், மேகம், ஜன்னி, நீரேத்தம் இவைநீங்கும்.

பாலசூர செந்தூரம்.

சிரியகுடுவையில் கால்பலம் நெல்லிக்காகெந்தியை ஒரு பலம் பாலேரசத்துக்கு கிழ்மேலுமிட்டு ஓடுமூடி சீலெசெய்து மூன்றெருவில் புடமிட்டுயெடுக்கவும், அரிசியிடை தேனிலிட வாய்வு சுரம் தீரும்.

கனமண்டூர செந்தூரம்.

மண்டூரம் (உ) பலம்யெடுத்து உலக்கிடத்தில் காய்ச்சி பசுவின்கோமியத்தில் தோய்க்கவும் இம்மாதிரி ஏழுதடவை காய்ச்சிகாய்ச்சிதுவைத்து உரலில்போட்டு கெட்டப்பாரை யினுல் யிடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்தில்போட்டு பசுங்கோமியத்தில் ஒருநாள் அரைக்கவும், வெள்ளாட்டுமூத் திரத்தில் ஒருநாள் அரைக்கவும், எருமைக்கிடா மூத்திரத் தில் ஒருநாள் அரைக்கவும் பிறகு,

கரசணங்கண்ணிச்சார்
பூந்துளச்சிச்சார்
பேரண்டைச்சார்
குண்டுமணியிலைச்சார்
பச்சைமஞ்சள்சார்
சங்கம்பட்டைச்சார்
ஆனைநெரிஞ்சிச்சார்
நீர்முள்ளிச்சார்
சாம்பிராணியிலைச்சார்
ஆலம்வேர்யிடித்தச்சார்
புளியம்யிலையிடித்தச்சார்
உலர்ந்தகடுக்காகியாழம்
அரசம்பட்டைக்கியாழம்

உத்தாமணிச்சார்
கொட்டைகிரந்திசார்
ஆடாதோடைச்சார்
நெல்லிக்காயிடித்தச்சார்
கத்தாழைச்சார்
தேவதாரிகியாழம்
சித்திரமூலசமூலகியாழம்
கருவேலம்பட்டைகியாழம்
நாகப்பட்டைகியாழம்
எலுமிச்சம்பழரசம்
புளிச்சதண்ணி
கொடிநார்த்தைச்சார்
சித்திரகொடிசமூலகியாழம்

இவ்வகைச்சாறு கியாழங்களில் நாளொன்றிற்கு ஒவ்வொரு தினுசுகளினலரைத்து முடிவில் பில்லைதட்டி (ா) கைவரட்டி (ம) கூடைஉமி (ம) கூடைகரி கெஜபுடத்தில்வைத்து மூன்றுநாள் பொருத்தெடுத்து கல்வத்திலரைத்து புட்டியில் வைத்துக்கொள்ளவும். இதை தேனில் அரிசியிடை கொடுக்க சுவாசகாசம், உப்புசம், க்ஷயம், (மரு) கிராணி, அதிசாரம் உள்காய்ச்சல், சோகை, வீக்கம், எட்டுவிதபாண்டு இவை யெல்லாந் தீரும் கடும்பத்தியம்.

தன்வந்திரியார் சண்டமாருத செந்தூரம்.

சுத்திசெய்தரசகர்பூரம்	விராகனிடை-	ச
லிங்கம்	,,	அ
வீரம்	,,	உ
நெல்லிக்காகெந்தகம்	,,	உ
ரசசெந்தூரம்	,,	க

இவைகளைக் கல்வத்திலிட்டு (உ) ஜாமங் கைவிடாமலரைத்து எடுத்து பணவிடையாக பனவெல்லத்திலிட்டு உருட்டி முழுங்கச்செய்யவும் ஆறுவேளை கொடுக்க ஜன்னி (மஙு) குஷ்டம், மகோதரம், பீலிகை, குன்மம், வாதம், (அம) கிரந்தி, கொருக்கு, காமாலை, பிளவைசுரம், (சுச) விரைவாதம், தனுர்வாதம், சூலைபவுத்திரம், கண்டமாலை, கருமேகம், வண்டுகடிகள் யோனிப்புத்து முதலான வியாதிகளுக்குத்தக்க அனுபானங்களிலிட தீரும்.

சண்டமார்தாண்ட செந்தூரம்.

பூரம்	விராகனிடை-	ம
லிங்கம்	,,	அ
ரசசெந்தூரம்	,,	உ
நெல்லிக்காகெந்தகம்	,,	க

இவைகளை கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு எட்டுஜாமமரைத்து கோழிமுட்டை வெள்ளையம்பிலியால் எட்டுநாளரை

த்து பில்லைசெய்து நிழலிலுலர்த்தி நல்லஜெலம் ஒருபடி கொதிக்கக்காய்ச்சி அதில் இந்த பில்லையைப்போட்டு சூடு ஆறினபிறகு எடுத்து உணர்த்தி கல்வத்தில் அறைக்கச் செந்தூரமாகும் அரிசிப்பிரமாணந் தேனிற்கொடுக்க பாரிசவாய்வு ஜன்னி தீரும், கடுகு நல்லெண்ணெய் தயிர் பால் ஆகாது.

யூநானி செந்தூரம்.

பூங்காவி	பலம்	உ
படிகாரம்	„	உ

இவையிரண்டும் கல்வத்தில் அறைத்து வெண்ணெய் அல்லது நெய்யில் சாப்பிடவும் பெரும்பாடு, வெள்ளை, பசிமை, ரத்தகாசம், மேகவெட்டை, உள்காச்சல், ஊஷ்ணவாய்வு, நாக்குவரட்சி இதுகள்தீரும், இச்சாபத்தியம் கடுகு நல்லெண்ணெய் நீக்கவும்.

தாம்பிர செந்தூரம்.

பழய ஜல்லிகாசியைக் கொண்டுவந்து தட்டானிடத்தில் கொடுத்து காய்ச்சி யிலைபோல் தகடுகளாக தட்டின பிறகு நன்ருய் சிவக்கக் காய்ச்சி யெலுமிச்சம்பழரசத்தில் தோய்க்கவும் இப்படி பதினெருதடவை காய்ச்சி தோய்த்த பிறகு அவுத்திக் கீரையை அரைத்து ஒவ்வொரு தகட்டுக்கும் தளமாய்ப்பூசி அதாவது முத்தையின் நடுவில் தகட்டைச்சொருகி அனைத்தும் ஒரேமுத்தையாய்த் திரட்டி சன்னகோணிப்பட்டையை சேற்றில்புரட்டி கீரைமொத்தைமேல் கவசஞ்செய்து இரண்டு முழ ஆழம் அகலங்கள முள்ள கெஜபுடத்தில் நூறுகைவரட்டியில் புடம்வைக்கவும்

நாலுனுளான பிறகு அதையெடுத்து கல்வத்தில் வெள்ளெருக்கன்பால் விட்டறைத்து பில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலை கவசம் செய்து ஐம்பதுகை வரட்டியில் புடம்வைக்கவும் மறுநாள் எடுத்துப்பார்க்க ஊதா செந்தூரமாகயிருக்கும் அதைக் கல்வத்திலிட்டு அறைத்து புட்டியில் வைத்துக்கொள்ளவும் இதற்கனுபானம் கால்படி புளிச்சதண்ணீரில் (உ) பலம் மிளகுபோட்டு (ரு) நாள் ஊரவைத்து நாலானுள் யெடுத்து வெய்யலில் உலர்த்தி சூரணம்செய்து நெய்பழகிய சட்டியில் ஒரு ரூபாயிடை தேன், ஒரு ரூபாயிடை இஞ்சிரசம், ஒரு ரூபாயிடை பசும்நெய், மூன்றும் விட்டு ஷை சூரணம்போட்டு லேகியமாய் கிளரி வைத்துக்கொள்ளவும். புளியங் கொட்டைப் பிரமாணம் லேகியத்தில் அரிசியிடை செந்தூரம் வைத்து உருட்டி சாப்பிடவும் வாதசுரம், மேகவாய்வு, பாரிச வாய்வு, கண்டமாலை கிரந்தி இப்படிப்பட்ட வியாதிகளெல்லாம் நிவர்த்தியாகும் தாதுவிர்த்தி யுண்டாகும், கடுகு நல்லெண்ணெய் நீக்கவும், இச்சாபத்தியம்.

செந்தூரவகைபரணி.

முற்றுப்பெற்றது.

இனிவரும் செந்தூரவகை பாகங்களில் கையாடத்தக்க உத்தமமுறைகள் இரண்டாங் காண்டத்தில் அச்சிட்டிருக்கின்றோம்.

உ

தேவிசகாயம்.

ஆருவது

மெழுகுவகைபாணி.

வெள்ளைப்பாஷாண மெழுகு.

வெள்ளைப்பாஷாணம் இரண்டுபலங்கொண்டுவந்து மெல்லிய சீலையில் சுத்தி வண்ணான் வெள்ளாவியில் யேழுதிரம் வைத்துப் பிறகு வேரே துணிசுத்தி சேத்தின்கீழ் (சய) நாள் புதைத்து வைத்தெடுத்து நாளட்டியாக (அதாவது) ஒரு நாளைக்கு ௩-௪-௫-௬-இவ்விதமாய் ஆயிரத்தி அறுநூறு யெலுமிச்சம்பழ ரசத்தினுல் அரைத்து முடிவில் செம்புசட்டியில் (௬) பலம் நல்லெண்ணெய் வார்த்து பதமாய்க் காய்ச்சி பொங்கி வருவதற்குமுன் மேற்படி பழச்சாற்றில் அரைத்த மருந்து பில்லையைப் போட்டால் நாகப்பழ நிரமாகும். அப்போதிரக்கி எண்ணெயை சாக்கடை அல்லது குப்பைமோட்டில் ஊத்திப்போட்டு மருந்தை மாத்திரம் பத்திரப்படுத்திக் கொள்ளவும், தேன், அல்லது வெண்ணெயில் சிறுபயறு பிரமாணம் (ய) அல்லது (யரு) இருபதுநாள் சாப்பிட மேகரிணம், படைவாய்வு, மூக்குரிணம், கண்டமாலை, செகப்பு, கரப்பு, படைகிரந்தி, முதலானதும் தீரும். (பத்தியம்) தேங்காய் நல்லவெல்லம் மீன் பூசினிக்காய் ஆகாது.

கோரோஜன மெழுகு.

லிங்கம்	விராகனிடை-	௨௰
பூரம்	,,	௨௰
சுத்திசெய்த வாளம்	,,	௨௰
லவுங்கம்	,,	௨௰
வீரம்	,,	க
கோரோஜனம்	,,	க

வீதஞ்சாப்பிட (சுசு) சிலேற்பனமும் கபங்கள், நீர்தோஷம், சிலவிஷம், மூன்றுசுரமும் வாதமுந்தீரும்.

இருமலுக்கு லேகியம்.

மிளகு பலம்-க, பசும்வெண்ணெய் பலம்-க, சீனகற்கண்டு பலம்-க, மிளகைசூரணித்து ஒருசட்டியை அடுப்பில் வைத்து நெய்யையூற்றி உருகினவுடன் மிளகுசூரணம் போட்டு கற்கண்டுபோட்டு சிவந்து வருமளவுங்கிளரி லேகியமாக்கிவைத்துக் கொண்டு களற்சிக்காய்வீதஞ் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

திப்பிலி லேகியம்.

திப்பிலி பலம்-உரு, வாங்கியிடித்து இரண்டரைபடி ஜலத்தில் கியாழமிட்டு எட்டுக்கு ஒருபங்காயிரக்கி கற்கண்டு இரண்டரைபலம், சுக்கு கடுக்கா, அக்கிராகாரம், அரத்தை ஓமம் சீரகம், தனியா, வெட்பாலரிசி, செண்பகப்பூ, கோஷ்டம் வகைக்கிப் பலம்-க, தேன் உரி-வ, நெய் ஆழாக்கு, மேல்படி கியாழத்தில் சகலமும் விட்டு லேகியமாய்க்கிண்டி கெச்சக்காய்ப் பிரமாணம்சாப்பிட சிலேற்பனம், வாதம், யிருமல் வாய்வு, உப்பிசம் தீரும்.

மதனகாமேசுர லேகியம்.

சுக்கு	பெருஞ்சீரகம்	அதிமதுரம்
கிராம்பு	மிளகு	வால்மிளகு
திப்பிலி	சிறுநாகப்பூ	திரிபலாதி
ஏலம்	ஜாதிக்காய்	ஜாபத்திரி
லவுங்கப்பட்டை	லவுங்கபத்திரி	கோஷ்டம்
கொத்தமல்லி	தாளிசம்	கருஞ்சீரகம்
அசுவகெந்தி	செண்பகப்பூ	கஸ்தூரிமஞ்சள்
தக்கோலம்	கசகசா	நீர்முள்ளிவித்து
உளுந்து	முள்வேலம்பிசினி	நிலப்பனங்கிழங்கு
திராட்சி	அபினி	

இதில் வகைக்கி அரைபலமாக யெடுத்து வருக்கவேண்டிய தினுசுகளை வருத்து தூள்செய்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு இதற்குச் சரியிடையாய் கெஞ்சாவை நிறுத்தெடுத்து நல்லஜெலத்தில் (எ) திரம் கழுவியெடுத்து விரைகாம்பு முதலானதும் நீக்கி (உ) படி நல்லஜெலத்தில் (௭) படி பசும்நெய்விட்டு அதில் கஞ்சாவைப்போட்டு நன்ருய்க் காய்ச்சி கிட்டி கட்டி நெய்யை அயச்சட்டியில் பிழிந்துக் கொண்டு மற்றநெய்யையும் கையால் நன்ருய் வழித்துக் கொண்டு பசும்பால் உழக்கு, சர்க்கரைபலம் (௩ய) ஒன்ருய் விட்டு அடுப்பேற்றி பாகுபதத்தில் சூரணங்களைக்கொட்டி நெய்யைவிட்டு வெந்தசமயத்தில் தேன்பலம் (அ) விட்டு பதமாய்க்கிளரி யிரக்கவும். இரவில் புசித்தானபிறகு ஒருகளஞ்சி முதல் மூன்று களஞ்சிவரையில் புசிக்கலாம். வீரியம் அதிகரிக்கும். தேகம் கவந்துவரும் கண்குளிர்ந்து பிரகாசிக்கும் பீளை, யிருமல், மந்தம், சூலை, பழையசுரம், க்ஷயம், இவைகள் நீங்கும். தேக ஆரோக்கியமும் மனதிடமும் உண்டாகும்.

இந்திரியவலுவிற்கு மாணிலேகியம்.

வெள்ளாட்டின்பீஜம் (ருய) வாங்கி பொடியாக அரிந்து வெய்யலில் உணர்த்தி தூள்செய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு அமுக்கிறாங்கிழங்கு பலம்-க, கசகசா திரிகடுகு ஓமம் ஜாதிக்காய் ஜாபத்திரி கிராம்பு அதிமதுரம் கோஷ்டம் அக்கராகாரம் லவுங்கப்பட்டை லவுங்கப்பத்திரி நீர்முள்ளிவிரை பூனைக்காலிவிரை முருங்கைவிரை நத்தைச் சூரிவிரை ஆலன்வித்து அரசன்வித்து சாரைப்பருப்பு பாதம் பருப்பு வகைக்குப்பலம்-வ, இளம்வருப்பாக வறுத்து சூரணம்செய்து வைத்துக்கொண்டு கெஞ்சா இரண்டுபலம் யெடுத்து நல்லஜெலத்தில் (எ) திரம்கழுவி விரைகாம்பு முதலானதும் நீக்கி உலர்த்தி நெய்யில்வருத்து சூரணம் செய்துக் கொள்ளவும். பசும்பால் (கூ) படி அடுப்பின்மேல்வைத்து சக்கரை (உய) பலம்போட்டு பாகுபதத்தில் சூரணங்களைக் கலந்து கொஞ்சங் கொஞ்சமாய்கிளரிக்கொடுத்து நெய் (உய) பலம் தேன் (ய) பலம்விட்டு லேகிய பாகமாய்க்கிண்டி யிரக்கி வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்குப் பிரமாணம் இரவில் புசித்தானபிறகு சாப்பிடவும்.

லேகியவகைபரணி-முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

எட்டாவது

எண்ணெய் வகைபாரணி.

கிரந்திக்கும் மேகவெட்டைக்கும் எண்ணெய்.

சித்தாமணக்கெண்ணெய் சேர் (க) க்கு செங்கொட்டை சேர் (வ) சாம்ராணி சேர் (வ) செவியம் சேர் (வ) சித்திர மூல பச்சைவேர்பட்டை (வ) எண்ணெயை அடுப்பில் வைத்து செங்கொட்டையை இரண்டு துண்டுகளாக வெட்டிப் போட்டு மற்ற மருந்துகளெல்லாம் இடித்துப்போட்டு முருக் கக்காய்ச்சி யிருத்துக்கொள்ளவும் நித்தம் ஒருகரண்டி வீதம் (சய) நாளைக்கி இரண்டுவேளையும் சாப்பிடவும் சர்வகிரந்தி மேகம் மேகவெட்டை ஊரல் இதுகள் தீரும், இச்சாபத்தி யம்.

குளிர்ச்சி எண்ணெய்.

சித்தாமணக்கெண்ணெய்	படி	க
பழச்சார்	,,	க
இளநீர்	,,	க
பசும்பால்	,,	க

இவைகளை ஒன்ருய் ஊற்றிக்கலக்கி அடுப்பில்வைத்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடிக்குஞ்சமயத்தில் பரங்கிச் செக்கை தனியா சீரகம் வால்மிளகு லவுங்கப்பட்டை ஜாபத்திரி வகைக்குப் பலம்-ந, இளவருப்பாகவருத்து மெ எண்ணெயில் போட்டு சற்று பொருத்து உடனே யிரக்கி வைத்து கோரோஜனை விராகனிடை-உ, குங்குமப்பூ விராக னிடை-உ, கற்கண்டு பலம்-ய, செவ்வாழைப்பழம்-அ, இவைகளை யெண்ணெயில் போட்டு கலக்கி வைத்துக் கொள்ளவும் அரைபல வீதமாய் (ரு) நாள் அல்லது (எ)

நாளுக்கி சாப்பிடவும், இச்சாபத்தியம் சகலசூடும்தணியும் திரேகங் குளிர்ச்சியாகும்.

சுகபேதி எண்ணெய்.

சித்தாமணக்கெண்ணெய் படி - ௨, பசும்பால்படி - ௨, அதிமதுரம் கடுக்கா இந்துப்பு கடுகுரோகணி வாளம் வகைக்கிப் பலம்-வ, இந்தசரக்குகளை யிடித்துக் கலக்கி காய்ச்சி வடித்துப் பெரியவர்களுக்கு அரைபலம் கொடுக்கவும் ஒரு நாழிசென்று வெந்நீர் கொடுக்கவும் பேதிநிருத்த வேண்டில் உப்பு கஞ்சிமோர் மாலையில் மிளகு சுக்கு கியாழம் இராத்திரிக்கும் மிளகு நீர்சாதம் சாப்பிடவும் துவரை துவையலாகும்.

வெள்ளை, மேகம், வாய்வு, புண்ணு கிரந்தி இதுகளுக்கு சேர்ந்த மங்கலத்து எண்ணெய்

ஜாதிக்கா	பலம்	க	லவுங்கம்	பலம்	௨௰
லவங்கப்பூ	,,	௨௰	சிறுலவுங்கப்பட்டை	,,	௨௰
வால்மிளகு	,,	௨௰	ஜாபத்திரி	,,	௩
கருஞ்சீரகம்	,,	௫	கடுகுரோகணி	,,	௨௰
சோம்பு	,,	க	கசகசா	,,	க௰
வாய்விளங்கம்	,,	கவ	குரோசானிஓமம்	,,	க
தாளிசப்பத்திரி	,,	க	வெட்பாலையரிசி	,,	க
பரிங்கிச்செக்கை	,,	௫	உரித்தபூண்டு	,,	அ
கடுக்கா	,,	௨			

இந்த தினுசுகளையிடித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு விளக்கெண்ணெய் ஒருவீசை வாய் அகண்ட சட்டியில் ஊத்தி அடுப்பேற்றி எரிக்கும்போது அதில் போடவேண்டிய தினுசுகள் பூவரசன்பட்டை ஒருபிடி பஞ்சுபோல் நருக்கிப் போடவும் சங்கம்வேர் கரிச்சாலையில் இரண்டும் ஒரு குத்து பஞ்சுபோல் யிடித்துப்போடவும்

மேல் கூறிய வகையில் பூண்டைமாத்திரம் உரித்து பல்லு பல்லாய் யெடுத்துப்போடவும் தீ சிறுகயெரித்து சிலங்கைக் கொதிவருகையில் முன் வஸ்திரகாயம் செய்துவைத்து யிருக்கும் மருந்தைக்கொட்டி கலக்கி யிரக்கும்பொழுது (உ௦) பலம் வாளத்தை சுத்திசெய்து பொடிப்பண்ணிப் போட்டுக் கலக்கி இரக்கவும் கற்கண்டுபலம் (ரு) திராட்சி பலம் (ரு) இதுகள்போட்டுக் கலந்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு சிறுகரண்டிவீதம் (எ) நாள் சாப்பிடவும். பத்தியம் வருத்தவுப்பு சுட்டபுளி, மறுபத்தியம் (எ) நாளும் இப்படியேயிருக்கவும், தீரும்வியாதிகள் புண்ணு, ரணக்கா கிரந்தி, மேகம், வெள்ளை, சிலவாய்வுகள் இவைகளெல்லாம் தீரும்.

கெர்ப்பஸ்திரீகளுக்கு பழயது எண்ணெய்.

விளக்கெண்ணெய் ஒருவீசை அடுப்பிலேற்றி தாளி வேர் ஒருபிடி கொண்டுவந்து யெண்ணெயில் போட்டு காய்ச்சவும் அந்தவேர் மளக்கென்று உடைந்தால் எண் ணெயை இரக்கி வைத்துக்கொண்டு சாப்பிடும் விவரம் காலை யில் அரைபலம் யெண்ணெய் சாப்பிட்டு உடனே பழயது சாப்பிடவும் கெணச்சூடு தீரும். கெர்ப்பத்திலுள்ள சிசுவுக் கும் யாதொரு வியாதியும் அணுகாது கெர்ப்பஸ்திரீயான வள் (ரு) வது மாதமுதல் (க) மாதம்வரையில் அந்தந்த மாதம் முதலில் (ங) நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம் ஆரோக்கியமாயிருக்கும்.

திமிர், தடிப்பு, குஷ்டரிணம், படை, சட்டை. மேகம், குஷ்டம், சொரி, இவைகட்கு எண்ணெய்.

பூவரசம்பட்டைரசம் அத்திப்பட்டைரசம் வெள்ளருகு ரசம் கோவைரசம் பீச்சங்கன்ரசம் வகைக்கிப்படி (வ) வேவித்த முத்துயெண்ணெய் படி (உ) அமுக்கிறாங்கிழங்கு பலம் (உ௦) பரங்கிச்செக்கை பலம் (ங) லவுங்கப்பட்டை

கார்போக அரிசி, கடுகுரோகணி, வாய்விளக்கம், திப்பிலி, வகைக்கு பலம்-க, மிளகு பலம்-உ, பூரம் பலம்-வ, இதுகளை தூள் செய்து மேற்படி சாறுவகைகளை எண்ணெயில் ஊத்தி அடுப்பேற்றி சிலங்கைக்கொதி பக்குவத்தில் தூள்செய்த மருந்தைப் போட்டுக் கலக்கி வடித்துக்கொண்டு சாப்பிடும் விதம் வேளைக்கு அரைபலவீதம் (ங) தடவை (எ) நாள் விட்டு(எ)நாள் சாப்பிடவும் பீர்க்கன்காய், முருங்கைக்காய், துவரம்பருப்பு,உப்பு, அரைக்கீரை ஆகும். புளி நீக்கவேண்டியது மேல்கண்ட வியாதியெல்லாம் தீரும்.

சர்வமேகசட்டை குட்டரிணங்களுக்கு நாரசிம்ம எண்ணெய்.

வெள்ளைக்கலியாண முருக்கன்பட்டை பூவரசன் பட்டை இலவன்பட்டை தனித்தனி இளநீர்விட்டு இடித்துப் பிழிந்தரசம் வகைக்கிப்படி-வ, பிரம்மதண்டிரசம் படி-வ, துத்தியிலைரசம் படி-வ, சிறுசின்னிரசம் படி-வ, கத்தாழைச் சாதம் தேங்காய்ப்பிரமாணம். வெந்தியம் பலம் (உ0) தூள் செய்து (ருய) பலம் சிந்தாமணியெண்ணெயை அடுப்பிலேற்றி வெந்தியத்தூளைப்போட்டு கத்தாழைசாதத்தையும் போட்டு மேல்படி பிழிந்துவைத்திருக்கும் ரசங்களையும் ஊத்தி காய்ச்சி பதத்தில் வடித்துக்கொண்டு பூரம் அரை பலம் மேல்படி எண்ணெய்விட்டரைத்து அதில் கலந்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு ரூபாயெடை எண்ணெய் புசித்து வென்னீர்சாதம் சாப்பிடவும் (ரு) நாள் அல்லது (எ) நாள் சாப்பிடவும், மருபத்தியம் அரை உப்பு அரை புளி சேர்த்துக்கொள்ளவும் மேல்கண்ட வியாதிகளெல்லாம் நீங்கும்.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் அட்சரம் மேகவெட்டை கெணம் இதுகட்கு குளித்தி எண்ணெய்.

மணத்தக்காளி, துளசி, துத்தி, பிரமி, வில்வம், வல்லாரை, கையான்பொடுதலை, நுணா, புங்கு, சங்கு, இந்த இலை

களின் ரசம் வகைக்கிப் படி-வ, முத்தெண்ணெய் படி-க, இவைகளை ஒன்றுய்க்கலந்து திப்பிலி அரத்தை ஓமம் வசம்பு கஸ்தூரிமஞ்சள் வகைக்கிப் பலம்-உ, ஜாதிக்காய் பலம் அரிக்கால் தூளாயிடித்து வஸ்திரகாயஞ்செய்து ஷை எண்ணெயில்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து குழந்தைகளுக்கு கரண்டி வீதமும் பெரியவர்களுக்குக் கால்பல வீதமும் (எ) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

கெணச்சூட்டிற்கு குளிர்ச்சி எண்ணெய்.

சிந்தாமணக்கு யெண்ணெய் படி-க, வல்லாரை சரம் படி-உ, வெந்தியம்பலம்-உ, ஆவின்பாலிலரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சிவடித்து கொஞ்சம் சக்கரையிட்டு கொடுத்து வரவும் திரேகம் தனித்து குளிர்த்தி யுண்டாகும்.

குழந்தைகட்கு மாந்த எண்ணெய்.

உத்தாமணிரசம்	பலம்	எ௫
விளக்கெண்ணெய்	,,	எ௫

இரண்டுங்கலந்து அடுப்பேற்றி காய்ச்சி யிரக்கினவுடன் பூரம்,ஏலரிசி, லவுங்கப்பட்டை, சுக்குவகைக்கு விராகனிடை உ௫, கடுகுரோகணி ஒண்ணே அரிக்கால் விராகனிடை, இவைகளை தூள்செய்து கல்வத்திலரைத்து எண்ணெயில் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு சிறுகரண்டிவீதங் கொடுக்கவும் உப்பில்லாத பத்தியம் தாயார்கூட பத்தியமிருக்க வேண்டியது.

குழந்தைகட்கு சகல மாந்த எண்ணெய்.

(௫ய) பலம் முத்தெண்ணெயில் துளசி, முசுமுசுக்கை, உத்தாமணி, சிலந்திநாயகம் தேள்கொடுக்கு, செருப்படை, கையாந்தகரை, நொச்சியிலை, வெள்ளருகு, பிரமியிலை, இவைகள் ரசம் வகைக்கி அரிக்கால்படி, கத்தாழை மடல்சாதம்

கிச்சிலிக்காய்ப் பிரமாணம், வரகுவைக்கலில் வெதுப்பி யெடுத்த ஆறு ஆத்து தும்மட்டிக்காய் ரசம் இவைகளை ஷெ எண்ணெயில் விட்டுக்காய்ச்சி சேறுபதமாயிருக்குஞ்சமயத் தில் கருஞ்சீரகம், வெந்தியம், கோஷ்டம் வகைக்குப் பலம்-உ, செண்பகமொக்கு விராகனிடை-க, பூண்டு பலம்-உ, போட்டு பதமாய்க்காய்ச்சிவடித்து திரேகதிடத்தின்படி (வ) அல்லது (உகூ) பலம்வீதமாய்க் கொடுத்து மாலையில் மிளகு சாம்ப லாக்கி துத்தியிலை வெந்தயம் வெங்காயம் கியாழமிட்டுக் கொடுக்கவும் சகல மாந்தமுந்தீரும்.

குழந்தைகட்கு அள்ளுமாந்த எண்ணெய்.

(அ) பலம் சித்தாமணக் கெண்ணெயில் ஒண்ணறைபலம் வெப்பாலன் பால்விட்டு ஒன்றைபலம் வெங்காயரசம் விட்டு கருஞ்சீரகம் கடுகுரோகணி வகைக்கிப் பலம் அரிக்கால் பொடித்துப்போட்டு காய்ச்சி வடித்துக்கொள்ளவும் பால் குடிக்குங் குழந்தை யாயிருந்தால் கால்பலம்வீதமாய் (ரு) நாள் கொடுத்து தாயாருக்கு புளியில்லாமல் பத்தியம் வைக்கவும்.

சுழிமாந்தத்திற்கு எண்ணெய்.

இண்டையிலைச்சார், சங்கம்யிலைச்சார், தூதுவேளைச் சார், துளசிச்சார், நொச்சிச்சார், உத்தாமணிச்சார், நாய் துளசிச்சார், ஏரண்டத்தயிலம் வகைக்கிப்படி அரிக்கால்,கடுகு ரோகனி பலம்-உ, இந்துப்பு பலம்-வ, வெண்காரம் பலம்-வ. சன்ருஷ்டகம் பலம்-வ, ஓமம் பலம்-வ, கருஞ்சீரகம் பலம்-வ, வசம்பு பலம்-வ, பூண்டு பலம்-உ இதுகளை அரைத்து ஷெ சாறுவகையுடன் எல்லாம் ஒன்றுய்க்கலந்து அடுப்பேற்றி பதமாய்க் காய்ச்சிவடித்து காலையில் ஒருகரண்டி வீதம் உள் ளுக்குக் கொடுக்கவும், இச்சாபத்தியம், சுழிமாந்தம் பொறை மாந்தம் வாதமாந்தம் இதுவெல்லாந்தீரும்

எலவம்பேட்டு எண்ணெய்.

புங்கம் பட்டை, பூவரசம் பட்டை, உழலத்திப் பட் டை, * வெள்வாயிப்பட்டை, மணிப்புங்கன்பட்டை, வெள்

வேலன்பட்டை, இவைகள் தினுசுக்கு அரைவீசை வீதமாய் நிருத்தெடுத்து பஞ்சுபோல் யிடித்து (அ) படி தண்ணீரில் போட்டு ஒருபடிகியாழமாயிரக்கி சங்கங்குப்பியிலே பெருகு மிழியிலே இரண்டுஞ் சிறுநீர்விட்டுயிடித்து பிழிந்தரசம் பத்து பலம் பிரமியிலேரசம் பத்துபலம் இவைகளை ஷை கியாழத்தி லூற்றி விளக்கெண்ணெய் ஒருவீசை கூடவிட்டு கலக்கி அடுப் பேற்றி பதமாய்க்காய்ச்சி யிருத்து ஒருகரண்டிவீதம் ஏழு நாளைக்கிச் சாப்பிடவும், கடும்பத்தியம் மருபத்தியத்தில் புளிகால் கூட்டவும் மோர் நெய் யிரச்சிகூட்டவும் (யிசு)நாளும் போனபிறகு பதினைந்தாம்நாள் விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ்செய்யவும், மேகம் கிரந்தி சிலந்தி சிலதழும்புகள் படை இதுகள் தீரும்.

---

* வெள்வாயிப்பட்டை யென்பது குருவி ஆலமரம்போல் விழுது விட்டு அந்தயிலே போலிருக்கும் அதுதா னென்ற றியவும்.

அணக்காட்டாத்தூர் எண்ணெய்.

கரசலாங்கண்ணி, பொன்னுங்கன்னி, நிலக்கடம்பு, நுணாயிலே, பிரமியிலே, முடக்கத்தான்பொடுதலே, செருப்படை வெள்ளருகு, முசுமுசுக்கை, புங்கம்வேர், வெங்காயம், எலு மிச்சம்பழம் இவைகளின்சாறு தினுசுக்கு அரிக்காற்படி, விளக்கெண்ணெய் (சூடு) பலம் இவையெல்லாம் ஒன்றாய்க்க லந்து அடுப்பேற்றி பதமாய்க்காய்ச்சி மெழுகுபதத்தில் இர க்கிவைத்துக்கொள்ளவும், காலேயில் ஒருகரண்டி யெண்ணெ யில் அரிக்காற் பலம் சற்கரை ஒருபலம் நீராகாரங்கூட்டி சாப்பிடவும் உப்பு கூட்டலாம் மேகம் (உக-ம்) ரெத்தப்பிர மியம், கண்டமாலே, மேகரிணம், பவுத்திரம், மூலம், முடக்கு, பிடிப்பு, மேகவாய்வு, மேகஊரல், மேகபடலம், புண்சிலந்தி, கிரந்தி, அண்டவாய்வு இவைகள் தீரும்.

கெணத்துக்கு எண்ணெய்.

விளக்கெண்ணெய்படி (க) கையாந்தகரை பொன்னுங்க ண்ணி சேர்த்து கத்தாழை வெள்ளேவங்காயம் கோவைபுளி

யாரை கற்பூரவல்லி இந்த தினுசுகளின் ரசம் வகைக்கி படி(வ) ஜாதிக்காய் ஜாபத்திரி மாசிக்கா கடுக்காப்பூ கோஷ்டம் அமுக்கனுங்கிழங்கு சீரகம் லவுங்கப்பத்திரி லவுங்கப்பட்டை பூண்டு வகைக்கிப் பலம் (அரிக்கால்) பசும்பால் படி(க) மேல் கூரிய கடை சரக்குகளை அறைத்து பாலில்கலக்கி சாறுவகை யெண்ணெய் முதலானதும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து கோரோஜனை குங்குமப்பூ வகைக்கி அரிக்கால்பலம் தூள் செய்துப் போட்டு வைத்துக்கொண்டு களஞ்சிவீதம் காலை ஒருவேளையாக (ரு) நாள் அல்லது (எ) நாள் கொடுக்கவும். கெனவெட்டை கெணசுரம் மாந்தம் உப்பிசம் ரெணங்கள் கெற்பவெட்டை இதுகள் தீரும்.

சகலகரப்பானுக்கும் எண்ணெய்.

பூவரசன்பட்டை செங்கத்தாரிப்பூ தகரப்பட்டை கண்டங்காலி நிலாவிரை வகைக்கிப் பலம் (ய) யெடுத்து யிடித்து (ரு) படி தண்ணீரில் கியாழம்வைத்து ஒருபடியாக சுண்டக் காய்ச்சி யிருத்து முத்தெண்ணெய் ஒருபடி வெள்ளாட்டுப் பால் ஒருபடி ஒன்றாய்க்கலந்து மிளகு கருஞ்சீரகம் கார்கோலரிசி பூண்டு வசம்பு சதகுப்பை வலம்புரிக்காய் பரங்கிப்பட்டை இதுகள் வகைக்கிப் பலம் (வ) யெடுத்து யிளம்வருப்பாய் வருத்து யிடித்து வஸ்திரகாயம் செய்து மேல்கூட்டிய யெண்ணெயில்போட்டு காய்ச்சி வடித்து பிரதி காலையிலும் கரண்டி வீதம் கொடுக்க சகல கரப்பானும் தீரும். அடியில்நின்ற கடு கெடுத்து ரெணமீது தடவவும் தீரும். (ரு) நாள் அல்லது (எ) நாள் கொடுக்க தாயார்கூட இச்சாபத்தியம் இருக்கவும்.

குழந்தைகள் சகல கரப்பானுக்கும் யாழ்பாணத் தெண்ணெய்.

விளக்கெண்ணெய் படி (வ) நொச்சி கருநொச்சி செம்முள்ளி சிலந்திநாயகம் சங்கங்குப்பி சங்கிலை முருக்கிலை செந்தொட்டி பூவரசன் சிறுசெருப்படை கோழியாவாரை கத்தாழை இதுகளின் சாறு வகைக்கி ஒரு பலம் யெடுத்து ஷை

எண்ணெயில் விட்டு அடுப்பேற்றி செங்கத்தாரிபட்டை கருஞ்சீரகம் கடுக்கா களிப்பாக்கு வெங்காயம் வகைக்கி (உ) விராகநிடையாக யெடுத்து தூளாகயிடித்து வஸ்திரகாயம் செய்து எண்ணெயில் போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி காலையில் ஒரு கரண்டி வீதம் (ரு) நாள் (எ) நாள் அல்லது (ய) நாள் கொடுக்க சகலகரப்பான் ரிணம் சொரி சிரங்கு முதலானதும் நீங்கிவிடும் தாயும் பிள்ளையும் பத்தியமிருக்கவேணும்.

பக்கசூலை கெற்பசூலைக்கு எண்ணெய்.

முளகரணையிலையை உரலிலிட்டு ஜெலம்வார்த்துயிடித்து (யஉ) பலம் ரசம்பிழிந்துக்கொண்டு அதில் (யஉ) பலம் முத்தெண்ணெய்விட்டு உரித்தெடுத்தபூண்டு திரி (ச) பலங்கூட்டி காய்ச்சிவடித்து திரேகதிடப்படி (௩) நாளைக்கி கொடுத்துவர பேதியாகும் பேதியதிகமானல் நோய் நீங்கினதென்று தெரிந்துக்கொண்டு நிருத்திவிடவும். இச்சாபத்தியம்.

விரைவாத சஞ்சீவி எண்ணெய்.

கெச்சக்காய்பருப்பு	ஏலம்
வால்மிளகு	பரிங்கிச்செக்கை
சன்னலவுங்கப்பட்டை	பூரம்
சுத்திசெய்தவாளப்பருப்பு	கடுகுரோகணி

வகைக்கி அரைபலமாகயெடுத்து யிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு கெச்சக்காயிலை வேறு முதலான சமூலம்கொண்டுவந்து (ய)பலம் நிறுத்து பஞ்சுபோல்யிடித்து ஒருபடி தண்ணியில் கியாழம்வைத்து கால்படியாகக் காய்ச்சி வடிக்கட்டி அதற்குச்சரியாய் சித்தாமணக்கெண்ணெய் விட்டு ஷை தூளைப்போட்டுக் கலக்கி அடுப்பேற்றி கமலாக்கினியாக கொஞ்சம் சிறுகயெரித்து பக்குவமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு காலையில் ஒரு கரண்டிவீதம் (எ) நாளைக்கி சாப்பிடவும். இச்சாபத்தியமாக கடுகு நல்லெண்ணெய் அவுத்திக் கீரை புகைபோகம் நீக்கவேண்டியது. விரைவீக்கம் நரம்பு நோய் முதலானதும் தீரும்.

மேகங்களுக்கு சித்திரமூல எண்ணெய்.

நல்லெண்ணெய் படி (க) பசுநெய் படி (க) சித்திரமூல யெண்ணெய் படி (உ) பால்வார்த்தரைத்து யெண்ணெயில் கலக்கி மெழுகுபதமாய் காய்ச்சிவடித்து கரண்டிவீதம் காலையில் சாப்பிடவும். தீரும்வியாதிகளாவன மேகம், குறிதுவாரயெறிப்பு, லிங்கபுத்து, கிரந்தி, வாய்நாற்றம், சூலை, வெடிரிணங்கள் தீரும். கடுகு நல்லெண்ணெய் நீக்கவும், வாய்வு பதார்த்தங்களும் ஆகாவாம்.

சகலவாய்வுக்கும் எண்ணெய்.

ஆமணக்கெண்ணெய்	சாறுபடி-	உ
ஆமணக்கெண்ணெய்	,,	உ
பசுங்கோமியம்	,,	உ
வெள்ளாட்டுக்கோமியம்	,,	க
நொச்சிச்சாறு	,,	௳
பசுமஞ்சள்சாறு	,,	௳
இஞ்சிச்சாறு	,,	௳
குமரிச்சாறு	,,	௳

கடுக்காய் கடுகுரோகணி வாய்விளங்கம் திரிகடுகு ஏலம் இந்துப்பு கல்லுப்பு நவாச்சாரம் எவாச்சாரம் அப்பளாகாரம் வால்மிளகு ஆனைத்திப்பிலி வெள்ளுள்ளி வகைக்கிக் களஞ்சி (ரு) மிலாவிரை கண்டங்கத்திரி வெள்ளைச்சார்வேளை சத்திச்சாரணைக்கிழங்கு வகைக்குப் பலம் (௳) இவைகளை யிடித்து நன்றாயரைத்து ஷை சாறுவகையாவும் ஒன்றாய்க்கூட்டி அறைத்த மருந்தை அதில்கரைத்து அடுப்பேற்றி மெழுகு பதமாய்க்காய்ச்சிவடித்து காலையில் ஒருகரண்டிவீதம்(ய)நாள் சாப்பிடவும், தீரும் வியாதிகளாவன வாய்வுகள், வாய்வுக் கட்டிகள், மகோதரம், குன்மம், கெற்பவலி, கெற்பசூலை, யிசிவு, கைகால்சூலை, சூலைக்கட்டு இவைகள் தீரும். பத்தியம் சுட்டபுளி வருத்தவுப்பு அறைபுளி அறைவுப்பு அறைகாரம் கூட்டவும். மருபத்தியமும் இம்மாதிரி, உப்பு முழுபங்கு சேர்க்கலாம்.

எண்ணெய்வகை பரணி.

முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்.

ஒன்பதாவது

தைலவகைபாணி.

பிரம்மராகாசித் தைலம்.

ஜன்னிக்கு.

இராகாசிமடல் வேண்டியது கொண்டுவந்து வரகு வைக்கலில் வதைக்கி சார்பிழிந்து அந்தசார் அளவுக்கு நல்லெண்ணெய்கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக யெறிக்கவும் சாறும் யெண்ணெயும் ஒன்றுப்பட்டபிறகு டிக்காமல்லி அரை பலம் சீமைகிச்சிலிக்கிழங்கு அரைபலம் இரண்டும்தூளாக்கி இறக்கும்போது போட்டு யிரக்கவும், படி தைலமிருக்கும் பட்சத்தில் மேற்கண்ட திணுசுகளை அறைபலம்போடலாம் (ச)நாளைக்கொருதகுதி தலைமுழுகிவந்தால் புரம்கழுத்துநோய் தலைவலி பல்ஜிஹுஜிஹுப்பு வெகுசீக்கிரம் வாங்கும். கோழி சூப்பு, யிரைச்சி, ஆட்டிரைச்சி, கத்திரிபிஞ்சு, முருங்கை, துவரை, மிளகுநீர், இதுகளாகும் ஸ்னானஞ்செய்ததினம் பகல் நித்திரை, புகை, பொடி, புத்தகங்கள் வாசிப்பு அதிக நடை கூடாது.

ஜன்னிக்கு சாதாரணத் தைலம்.

ஜடாமாஞ்சில் கோஷ்டம் பூலாக்கிழங்கு தேவதாரம் செம்புராப்பட்டை கருஞ்சீரகம் கார்போக அரிசி செண்பக மொக்கு சிறுநாகப்பூ செவியம் சிறுதேக்கு குருவேர் நன் ஞரிவேர் பச்சிலை சந்தணத்தூள் கொம்பரக்கு சித்தாமுட்டி பளிங்கு சாம்ருணி கிச்சிலிக்கிழங்கு டிக்காமல்லி வகைக்கி விராகனிடை (க) நன்ருயிடித்து வஸ்திரகாயம்செய்து வைத்

துக்கொண்டு இரண்டரைபலம் நல்லெண்ணெய்க்கி (வ) பலம் தூள்போட்டு காய்ச்சி முழுகவும். மேல்கண்டவியாதிகள் தீரும். பத்தியமும் அப்படியே.

வில்வாதித்தைலம்.

வில்வவேர் பத்துபலம் கொண்டுவந்து பஞ்சுபோல் யிடித்து (உ) படி ஜெலத்திலிட்டு கால் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி யெடுத்து அதற்குச் சரிபாகமாக நல்லெண்ணெய்வார்த்து அடுப்பேற்றி சந்தனம் ஒருபலம் அரைத்துப்போட்டு கலக்கி மெழுகுபதமாய்க்காய்ச்சி முழுகிவர பித்தம் கபாலவெட்டை மேகம் தீரும், கண்குளிர்ச்சி யுண்டாகும். இச்சாபத்தியம்.

வெட்டிவேர்தைலம்.

புதியவெட்டிவேர் (ய) பலம் கொண்டுவந்து பஞ்சு போல் யிடித்து இரண்டுபடி ஜெலத்தில்போட்டு கால்படியாழமாக யிரக்கிவடித்து கால்படி நல்லெண்ணெய்விட்டு ஒருபலம் அதிமதுரம் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய் காய்ச்சிவடித்து தலைமுழுகிவர பீனிசம், மண்டைகுலை, கண் புகைச்சல், காதுமந்தம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

கீழாநெல்லித்தைலம்.

கீழாநெல்லி சமூலமாக பிடிங்கிவந்து யிடித்து (வ) படி சாறுபிழிந்து கால்படி நல்லெண்ணெய்விட்டு சந்தணம் அதிமதுரம் சித்தாமுட்டி வகைக்கி ஒருபலம் அறைத்துப்போட்டு மெழுகுபதமாய் காய்ச்சி தலைமுழுகிவர பித்தம் கைகாலெரிவு வெள்ளோக்காளம் வாயூரல் கிருகிருப்பு நீர்சுருக்கு இதுகள் நீங்கும் இச்சாபத்தியம்.

மண்டைகுலைக்கு தைலம்.

நெல்லிக்காய்ச்சாறு கரிச்சாலைச்சாறு பசும்பால் வகைக்கி ஆழாக்கு நல்லெண்ணெய் மூன்றுழாக்கு ஒன்றாய்க்கலந்து

அதிமதுரம் ஒருபலம் அறைத்துப்போட்டு மெழுகுபதமாய் காய்ச்சி முழுகிவர மண்டைகுலை கண்ணோய் கண்ணெரிவு கண்ணீர்வடிதல் இவைநீங்கும்.

கபாலசூட்டுக்கு சீரகத்தைலம்.

(உ) பலம் சீரகத்தையிடித்து இரண்டுபடி ஆத்துஜலத்தில் போட்டு கியாழம்வைத்து யெட்டில் ஒருபங்கா யிரக்கி அதில் ஒருபடி நல்லெண்ணெய்விட்டு கார்போகியரிசி ஒரு பலம் ஷ கியாழத்தால் அறைத்து யாவும் கலந்து அடுப்பில் வைத்து மெழுகுபதமாய் காய்ச்சியிரக்கி (ச) நாள் வட்டமாக முழுகிவரவும் திரும்வியாதிகள் உள்ளனல், வாய்வு, மேகத் தடிம்புகள், சோகை, கபாலச்சூடு, இவைகள் தீரும். இச்சா பத்தியம்.

பொன்னுங்காணித் தைலம்.

பொன்னுங்காணி சமூலமாக பிடிங்கிவந்து யிடித்து உழக்குச்சாறு பிழிந்துக்கொண்டு அதில் உழக்குநல்லெண்ணெவிட்டு (க) பலம் கோஷ்டம் கொண்டுவந்துயிடித்து பசும் பால்விட்டு அரைத்து கலந்து மெழுகுபதமாய் காய்ச்சி வடித்து முழுகிவர திரும்வியாதிகளாவன பித்தம் (சஅ) கிருகிருப்பு மண்டையிடி உஷ்ணங்கள் உட்சுரங்கள் கைகாலெரிவு கண்ணெரிச்சல் இதுகள் தீரும். கண்கள் குளிர்ச்சி யுண்டாகும் இச்சாபத்தியம்.

ஒண்டிதலைநோவுக்குத் தைலம்.

சித்திரமூலமும் கஸ்தூரிமஞ்சளும் சமயிடையாய் அரைத்து அடைதட்டி நல்லெண்ணெயை காயவைத்து அதில்போட்டு அந்தஅடை சிவக்கிறவரையில் காய்ச்சவும் அடையை திருப்பிப்போட்டு காய்ச்சி அடைவெந்து சிவந்த பிறகு யிரக்கி அந்த யெண்ணெயை தலைநோய் வருவதற்கு (ரு) மணிநேரத்திற்கு முன்னுதாக தலைமுழுகவும் இப்படி நாள்விட்டு நாள் முழுகவும் பத்தியம் பருப்புதொவையல் ரசம் பகலில் நித்திரையாகாது.

சுகநாத தைலம்.

சுத்தமான நல்லெண்ணெய் (உ) படி அகத்திக்கீரை ரசம் (உ) படி இவ்விரண்டும் கூட்டி வெய்யலில் வைத்து மறுநாள் ஒருபலம் கோஷ்டம் பசும்பாலில் அறைத்து அதிற் கலந்து காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துவரவும் மேகம் உஷ்ணம் முதலான அனல்நீங்கி மிகவும் குளிர்ச்சிதரும்.

சாலேசுரத்தைலம்.

(சய) பலம் நல்லெண்ணெயில் நிலாவிளாயிலை விளாங் காய்ப் பிரமாணம் வில்வப்பழம் (க) பசும்பாலில் அறைத்து சீரகம் (க) பலம் முலைப்பாலி லறைத்துக் கூட்டி காய்ச்சி வடித்து ஸ்நானம்செய்துவரவும் சாலேசுரம் தீரும்.

பித்தகோடரித்தைலம்.

நல்லெண்ணெய் பசும்பால் யிளநீர் வகைக்கி ஒருபடி ஒன்றாய்க்கூட்டி இத்துடன் அதிமதுரம் குங்குமப்பூ கோஷ் டம் ஏலம் சந்தணம் லவுங்கம் விலாமிச்சுபூண்டு ரோகணி நன்னாரி பசும்பாசி நெய்தற்கிழங்கு சடாமாஞ்சி தண்ணீர் விட்டான்கிழங்கு செண்பகப்பூ ஜாதிக்கா கோரைக்கிழங்கு புனுகு பச்சை கற்பூரம் வகைக்கி (கவ) விராகநிடை எடுத்து அம்மியில் வைத்து யிளநீர் விட்டறைத்து கலக்கி காய்ச்சி வடித்து உச்சி முதல் உள்ளங்கால் வரையில் தேய்த்து (க) மணிநேரமுழுகவும் இப்படி (ச-ரு) வாரம் முழுகிவர நேத்தி ரத்தைச்சார்ந்த சகல வியாதியும் தீர்ந்து குளிர்ச்சியுண்டாம் வாய்நீரூரல் வாந்தி மயக்கம் நெஞ்செரிப்பு திரேககாந்தல் கண்புகைச்சல் யாவுந் தீரும்.

பீனிசத்தைலம்.

நெல்லிமுள்ளி மிளகு கடுக்கா கஸ்தூரி மஞ்சள் வேப்பம் விரை இதுகள் வகைக்கி ஒருபலம் எடுத்து கையாந்தகரை சாற்றில் (ச) ஜாமமறைத்து (ம) பில்லையாகத் தட்டி வெய்ய லில் காயவைத் தெடுத்துக்கொள்ளவும் ஒரு பில்லையை பசும் பால் விட்டு அறைத்து தலையில் தடவி நன்றாய் தேய்த்துக் கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும் இப்படி நாலு நாளைக் கொருதடவை முழுகிவரப் பீனிசம் நீங்கிவிடும் இச்சாபத்தியம்.

திரேகநிதானத்தைலம்.

வாததேகிகளுக்கு பசும்நெய் (க) யெள்ளெண்ணெய் (உ) முத்தெண்ணெய் (ங) இந்த யெடைகளாகக் கூட்டிக் காய்ச்சி முழுகவும். பித்த தேகிகளுக்கு யெள்ளெண்ணெய் (க) முத்தெண்ணெய் (உ) நெய் (ங) இந்தயெடைகளாகக் கூட்டி காய்ச்சி முழுகிவரவும். சேத்துமதேகிகளுக்கு முத்தெண்ணெய் (க) நெய் (உ) யெள்ளெண்ணெய் (ங) இந்த யெடைகளாகக் கூட்டிக்காய்ச்சி உரவுசெய்து முழுகவும் அரப்பு சிரகம்.

ஐங்கூட்டுத் தைலம்.

வேப்பம்யெண்ணெய் புங்கெண்ணெய் எள்ளெண்ணெய் முத்தெண்ணெய் புன்னையெண்ணெய் இவைகளை சமமாகக் கூட்டி காய்ச்சி முழுகிவர தனுர்வாதம் மகாவாதம் ஜன்னி பாதசுரம், தோஷங்கள் நிவர்த்தியாகும்

அப்பியங்க ஸ்தானவிதி.

கஸ்தூரி மஞ்சள் மிளகு கடுக்காய்த்தோல் நெல்லிப் பருப்பு இவைகளை கிரமப்பிரகாரம் காராம்பசுவின் பால் விட்டரைத்து கொதிக்கவைத்து ஒப்பற்ற சிரசில் தேய்த்து ஸ்நானஞ்செய்தால் என்னுளும் பிணிகளுக்கு இஞ்சிற்றேனு மிடமில்லை இதுவே பஞ்சகற்ப விதியென் றறியக்கடவது.

தைலஸ்நான காலவிதி.

சித்திரை வைகாசி மாதங்களில் சூரியன் உதயமான ஐந்துநாழிகைக்குள்ளாகவும், ஆனிஆடி மாதங்களில் எட்டு நாழிகைக் குள்ளாகவும், ஆவணி புரட்டாசி அற்பிசி கார்த்திகை மாதங்களில் நாலுநாழிகைக்குள்ளாகவும் மாசி பங்குனி மாதங்களில் மூன்று நாழிகைக்குள்ளாகவும் எவ்வித தைல ஸ்நானங்களும் செய்யப்படுவது தைலவிலக்ஷண முள்ளதாயினும் தேகசுபலக்ஷண முண்டுபண்ணும். மற்றகாலங்கள் யாவும் தைலத்திற்கு அகாலமென்றறியவும்.

தைலவகைபரணி

முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்.

பத்தாவது

வீரியவிர்த்திவகைபரணி.

இந்திரியகட்டுக்குச் சூரணம்.

நறுவலியின்பிஞ்சு கருவேலன்பிஞ்சு காட்டுப்பெரண்டையிலை இவைகளைத் தனித்தனியாய் நிழலிலுணர்த்தியிடித்து சூரணமாகச்செய்து அதற்குச் சரியிடையாய் சக்கரைக் கூட்டி இரவில் போஜனஞ்செய்தபிறகு திருகடிப்பிரமாணம் புசித்து ஆழாக்குபால் சாப்பிடவும் இப்படி பதினைந்துநாள் புசிக்க நீத்திருந்த இந்திரியங்கட்டும்.

இந்திரியபுஷ்டிக்கு.

ஒருகோழிமுட்டை வெள்ளைக்கருவும், தேன், இஞ்சிரசம் பசும்நெய், வெள்ளைவெங்காயம், இவ்வைந்தும் சமயிடையாய்கூட்டி மத்தித்து சிறுலவங்கப்பட்டை விராகனிடை அறைகூட்டி புசிக்கவும் இவ்விதம் ஏழுநாளைக்கு புசிக்கும்போது ஒருபலம் நல்லெண்ணெயில் கால்தோலா குங்குமப்பூ கூட்டி மிழைத்து லிங்கத்திற்கு லேபசெய்துவரவும் அதாவது முளாம் பூசுவதுபோல் மேலே தடவிவரவும் இந்திரியம் அதிகரிக்கும் லிங்கம் வலிவுதரும்.

இந்திரியங்கட்ட.

பச்சை நிலப்பனங்கிழங்கு சீனம் தண்ணீர்விட்டான் கிழங்கு ஆனைநெரிஞ்சிக்காய் வகைக்கி தோலா (க) இவைகளை மைபோலரைத்து காற்படி பசும்பாலில் கலக்கிக் காய்ச்சி இரவில் புசித்தானபிறகு சாப்பிடவும் இப்படி மூன்று நாள் கொள்ள நீத்திருந்த இந்திரியங்கட்டும்.

இந்திரியபந்தனம்.

பிரண்டை முடிச்சிவிழுந்திருக்கிற வேரைப்பார்த்து நாயற்றுக்கிழமையில் மஞ்சள் நூலால் காப்புக்கட்டி தேங்

காய்ப் பலிகொடுத்து வேரைப்பிடிங்கி முடிச்சியைக் கத்தரித்து கருப்பு சிகப்பு வெள்ளை இந்த மூன்றுவகை நூலினல் குளிசமாடி அரையின் முன்பக்கமாய் கட்டிக்கொண்டு புணர்ந்தால் இந்திரியம் விழாது மறுபடி பின்பக்கமாக தள்ளிப்புணர்ந்தால் கலிதமாகும்.

வீரியவிர்த்திக்கு.

காலையிலெழுந்து பொன்னுங்கண்ணி இலைகளைப்பிடிங்கி வாய்கொண்டமட்டும் மென்றுதின்னவும் இப்படி (சய) நாளைக்கு தின்றுவர வீரியவிர்த்தியாம்.

இந்திரியதம்பனம்.

கலிவிருத்தம்.

நீலக்காரி நிலப்பனை சர்க்கரை
ஆவின்பாலி லரைத்து விழுங்கிட
மானைப்போல்விழி மங்கையர் தங்களை
ஊணிப்போடி லுலக்கைய தாகுமே.

லேபனத்திற்கு.

(யரு) சங்கம்பழத்தை மெல்லியசீலையில்போட்டு பிழிந்துவருகிற ரசத்தை பீங்கானில்பிடித்து வைத்துக்கொண்டு பச்சைகற்பூரம் ஒருபணவிடை உள்ளங்கையில்வைத்து அந்த ரசம் கொஞ்சம்விட்டு யிழைத்து லிங்கநரம்புமீது தடவ லிங்கம் பருத்திருக்கும்.

விந்துகலித மாகாதிருக்க.

தாழம்பூவின் உள்ளேயிருக்கும் விபூதியையெடுத்து கோழிமுட்டை வெள்ளைக்கருவாலே யிழைத்து லிங்கநரம்பு மீது பூசினல் விந்து சீக்கிரத்தில் கலிதமாகாது.

பீஜம் கெட்டிப்பட.

எட்டிக்கொட்டை அமுக்கனுங்கிழங்கு வசம்பு சமநிடையாகயெடுத்து பசும்பால் விட்டரைத்து லிங்கநரம்புமீது ஒரு வாரம் தேய்த்துவர கெட்டிப்படும் மிகுந்த வலிவுகொள்ளும்.

இதுவும் லேபன தைலம்.

தித்திப்பு மாதளம்பழத்தோல் (ச) பலம்யெடுத்து கால்படி ஜலத்தில் வேகவைத்து (ச) பலம் கியாழமாக வடித்து

எள்ளெண்ணெ (உ) பலம் லவுங்கப்பட்டை சிறுநாகப்பூ நாயுருவி விரை வெங்காயவிரை அக்கராகாரம் கோஷ்டம் வெள்ளைப்பூ பூர்க்கும் அலரிவேர்பட்டை சிகப்புபூவின் அலரி வேர்பட்டை வகைக்கி தோலா (உ) யெடுத்திடித்து வஸ்திர காயஞ்செய்து அரைத்து ஷை கியாழம் எண்ணெய் யாவும் ஒன்றாகக்கலந்து காய்ச்சி யிரக்கி வைத்துக்கொண்டு (ய௫) நாளைக்கி தினம் லிங்கத்தின்மீது தடவிவர சோர்வை நீங்கி மிக்கவலிவு தரும்.

இதுவுமது.

அக்கராகாரம் மருதோன்றிவிரை அபினி சமனிடையாக யெடுத்து தேனில் அரைத்து (ய௫) நாள் லிங்கத்தின் மீது தடவிவர நீண்டு கெட்டிப்படும்.

வீரியவிர்த்திக்கி.

ஜாதிக்கா அபினி காமப்பூ லவுங்கம்வகைக்கி (கவ) விராகனிடையாக எடுத்தரைத்து ஒரு ஊர்க்குருவின் வயற்றைக்கிரி குடல்முதலான அசுத்தங்களைநீக்கி அதனுள்வைத்து நூலினால்தைத்து அதற்குப்போதுமான நெய்யில்போட்டு பொரித்துயெடுத்து யெலும்புபோக்கி மெழுகுபோலரைத்து கெச்சக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்கு பால் சாப்பிடவும் இப்படி (சய) நாள் சாப்பிட வீரியவிர்த்தியும் திரேகவலிவும் கொடுக்கும்.

இதுவுமது.

தென்னம்பாளை இளசியாகக் கொண்டுவந்து அதனுள்ளிருக்கும் கொழுந்து அரிசிகளில் ஒருபிடி யெடுத்து பசும் பால்விட்டரைத்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் சாப்பிடவும் இப்படி காலை மாலை இரண்டுவேளையும் (சய) நாள் சாப்பிட வீரியவிர்த்தியும் தாதுவலிவுபடும் இரவில் புசித்தவுடன் ஆழாக்கு பால்சாப்பிடவும் இதுவரையில் ஸ்திரீபோகங் கூடாது.

வீரியவிர்த்திலேகியம்.

ஜாதிக்கா, சாரப்பருப்பு, பாதிமிபருப்பு, காமப்பூ, மாவுசுக்கு, தேத்தான்கொட்டை, முருங்கைபிசின், முருங்கைப்பூ, வகைக்கி உ௨-விராகனிடையாக யெடுத்து ஒரு கோழிமுட்டை வெள்ளைக்கருவினால் மெழுகுபோல் அரை

த்து ஒருபலம் நெய்யில்போட்டு அரைபலம் சற்கறைகூட்டி அடுப்பேற்றி லேகியம் போற்கிண்டி கெச்சக்காய் பிரமாணம் இருவேளை சாப்பிடவும் இப்படி (உ௰) நாள் அதுவரையிலும் ஸ்ரீசம்பந்தங்கூடாது.

இருதயவலிவிற்கு.

சிறுலவங்கப்பட்டை சிகப்புநிறமான காவிசந்தனத் தூள் வகைக்கி விராகனிடை (க) தூள்செய்து வெள்ளைசற்கரை (கூ) விராகனிடையில் கூட்டி புசிக்கவும்.

இதுவுமது.

(ரு) எலுமிச்சம்பழ ரசத்தில் குலாப்புத்தூள் சந்தனத் தூள் ஜாதிக்காதூள் வகைக்கி தோலா (க) காவிக்கல் விராகனிடை (க) கூட்டி வைத்துக்கொண்டு வேளைக்கி தோலா வீதம் புசிக்கவும்.

இதுவுமது.

சந்தனத்தூள் பலம்-உ, சுக்கு பலம்-உ, காசினிவிரை பலம்-க, சீரகம் பலம்-க, இவைகளை கல்வத்தில் அரைத்து பில்லை பில்லையாக செய்துணர்த்தி வேளைக்கி ஒரு தோலா வீதம் கொடுத்து வுடனே பன்னீராகிலும் நெல்ல ஜெலமாகிலும் ஒருரூபாயிடை சாப்பிடவும்.

இதுவுமது.

இலவன்கோந்து, சுக்கு, ஏலரிசி, சோம்பு, அதிமதுரம் சந்தனம், வில்வசதை, ரோஜாப்பூ, வகைக்கி தோலா-க, தனியாபலம்-ஙு, சீனுகற்கண்டு பலம்-உ, இவைகளை சூரணஞ் செய்து முன்னுக கற்கண்டை அடுப்பேற்றி ஜெலம் கொஞ்சம்விட்டு பாகுசெய்து அதில் சூரணங்களைக் கொட்டிப் பாகமாய்க்கிளரி வேளைக்கி தோலாவீதம் சாப்பிடவும்.

சாரீரம் நன்ருக.

சுக்கு கடுக்கா திப்பிலி வாலுளுவையரிசி சமனுக சேர்த்து தேனிலரைத்து தூதுளங்காய்ப் பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்குபால் சாப்பிடவும்.

வீரியவிர்த்திவகைபரணி.

முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்.

பதினோராவது கண்டாவிழ்தபரணி.

ஆரோக்கியகலிக்கம்.

தும்பைப்பூ-௱ களாப்பூ-௱, மிளகு பலம்-க, மிளகைமாத்திரம் ஒன்றிரண்டாய் தட்டி இந்த மூன்றுதினுசும் கால்படி நல்லெண்ணெயில் போட்டு ஒரு புட்டியிலூற்றி கார்க்கு அடைத்து பூமியில் (ஜ) கெஜ ஆழத்தில் குழிவெட்டி புதைத்து சயி-நாள் பொருத்தெடுத்துக் கொண்டு வெள்ளிக் கம்பியினால் தொட்டு கலிக்கம் போல காலையில் தீட்டி வந்தால் சூடு, கண்ணெரிச்சல் காரிகம், நீங்கிவிடும். கண்குளிர்ச்சியாயிருக்கும் வெகு ஆரோக்கியங் கொடுக்கும்.

நேத்திரபேதி.

ஈனுமெருமைப்பாலில் சித்தாமணக்கு பருப்பையிழைத்துத்தீட்டினால் மருநாள் வரையில் கண்களில் பீளை சாறும் நேத்திரங்கள் பரிசுத்தமாயிருக்கும்.

அந்திமாலைக்கி.

கிருஷ்ண துளசியிலைரசம்இரண்டு துளியாக நேத்திரத்தில் விடவும் இப்படி மூன்றுநாளைக்கிகாலையில் விட குணப்படும்.

நேத்திரசுத்திகம்பி.

காரீயத்தை திருப்பலாதியாழத்திலும் மழை நீராலும் கரிச்சாலை ரசத்தாலும் பசும் நெய்யிலும் தேனிலுந் தனித்தனியாக வுருக்கியூற்றி ச-அங்குல நிகளத்தில் கம்பி போல்நீட்டி வைத்துக்கொண்டு காலையில் எழுந்தவுடனே கண்களில் தீட்டிவந்தால்நேத்திரரோகங்கள்வராதிருக்கும்.

துர்மாமிசவளர்த்திக்கு.

பத்து கெஞ்சாவிரையை ஊசியில்குத்தி தீபத்தில்காட்டிகருக்கி வெண்ணெயில் குழைத்து கண்களில் தீட்டிவரவும்.

காதுசீழுக்கு.

மனோசிலை, தாளகம், செங்கொட்டை, வகைக்கி விராகனிடை-க, வாங்கி தூளாக யிடித்து மூன்றுபலம் நல்லெண்ணெயில்போட்டு வெள்ளாட்டுநீர் ஆழாக்குவிட்டு பதமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு

காதுக்கு மூன்று வேளைவிட தீரும்.

இதுவுமது.

வில்வப்பழஞ்சதையைவெள்ளெண்ணெயில் போட்டுவேக வைத்து காதில்விட தீரும்.

காது சீழ்க்குத்தலுக்கு.

பருத்தியிளங்காயும் எருக்கன் யிளங்காயும் வெதுப்பிச் சார்பிழிந்து காதில்விடவும்.

காதுசீழ்வேதனைக்கு.

இந்துப்புசுக்கு எண்ணெயில் விட்டுகாய்ச்சி காதில் விடவும் தீரும். அல்லது,

பெருங்காயம் முள்ளிவேர் முருங்கைவேர் யிலைகள்ளியிலை சமனுயெடுத்து அறைத்து நல்லெண்ணெயில் காய்ச்சி காதில்விடவும் அல்லது.

வெள்ளைப்பூண்டு முருக்கைவேர்பட்டை எருக்கம்பூ கள்ளிப்பால் வகைக்கி விராகனிடை-க, நண்டு-க, இவைகளை சிதைத்து-வ, படி வேப்பெண்ணெயில் போட்டு காய்ச்சிவிடவும்,

காதிரைச்சலுக்கு.

தைவேளைச்சாரு நல்லெண்ணெயும் சமமாய்கூட்டி காய்ச்சி காதில்விடவும்.

காதில் சதைவளர்த்திசீழ்.

(க) பலம் நல்லெண்ணெயில் ஒரு கரப்பான் பூச்சியைப் போட்டு காய்ச்சிவிடவும்.

காதுபொங்குதல் சீழ்

ஒரு பலகாரையை அடுப்பில் நன்ருய் சுட்டு யிடித்து தூளாக்கி ஒருசிட்டிக்கை காதில் போட்டு எலுமிச்சம்பழரசம் கொஞ்சம் பிழியவும்.

நீர்சுருக்கிற்கு.

முள்ளாங்கி கிழங்கை யிடித்து சார்பிழிந்து வெள்ளைசக்கரை கலந்து சாப்பிடவும்.

இதுவுமது.

காசிலிவிரை வெள்ளரிவிரை துளசிவிரை அரசுவிஊது விளாம் பிசினி வால்மிளகு வகைக்கி (உ) பலம் யெடுத்து சூரணமாக்கி சமயிடை பனங்கற்கண்டுசேர்த்து ஆழாக்கு பசும்பாலில் கலந்து காலையில் சாப்பிட நீர்சுருக்கு வெள்ளையும் நீங்கும்.

நீரடைப்பிறகு.

வால்மிளகுவிராகனிடை(உ) யிடித்து வஸ்திரகாயம்செய்து தண்ணீர் பலம்(ய)ல் கரைத்து ஒரு நாளைக்கி (ச)திரம் கொடுக்கவும்.

ஆசனகடுப்பிற்கு.

கால்படி பசும்பாலில் (ந) எலுமிச்சம்பழம்பிழிந்து சிறுகுச்சியினுல் கடைவது போல் சிலுப்பி தெளிய வைத்தால் மேலே தெளிவான ஜலம் நிற்கும் அதை யிறுத்துக்குடி

த்தால் உடனே ஆசனகடுப்பு நிற்கும்.

வெள்ளைக்கு.

வெங்கப்பட்டை ஏலரிசி ஜாதிக்கா ஜாபத்திரி வெள்ளை மிளகு வகைக்கு விராகநிடை அரை, பூரம்விராகநிடை-க, விளக்கெண்ணை பத்துபலத்தில் அரைத்துப்போட்டு காய்ச்சி வேளைக்கு ஒருகரண்டிவீதம் ஏழுநாள் சாப்பிடவும்.

தீராதவெள்ளைக்கு.

வெள்ளைக்குங்கிலியம் பொடிசெய்து ஆத்து ஜெலத்தில் போட்டு கொதிக்கவைத்து யெடுத்து இப்படி ஏழு தகுதி கொதிக்கவைத்தெடுத்து அந்த யிடைக்கி இரண்டிடை சீனி கற்கண்டு தூள்சேர்த்து அந்திசந்தி திரிகடிப்பிரமாணம் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

புதுவெள்ளைக்கு.

பழம்பாசி யிலையையும் சீரகமும் அறைத்து எருமை தயிரிற்கலந்து (ரு) நாள்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

இதுவும்வெள்ளைக்கு.

பச்சைமுளகாயிலை ஒருபிடி எடுத்து (௬) மிளகுயெண்ணி வைத்து அறைத்து தயிரில் கலந்து காலையில் (ரு) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்

இதுவுமது.

பீச்சங்கான்யிலை கீழாநெல்லியிலை பழம்பாசியிலை மூன்றும் சமயிடையாய்சேர்த்து அரைத்து எலுமிச்சங்கா யளவு எடுத்து அத்துடன் பொங்க வைத்து படிகாரத்தூள் திருகடிபிரமாணம் சேர்த்து தயிரில் கலந்து காலையில்சாப்பிடவும் கடும்பத்தியம் இப்படி மூன்றுநாள் சாப்பிட்டு மறுபத்தியம் (ரு) நாள் ஆனபிறகு ஓமம்தேய்த்து தலைமுழுகவும்.

இரத்தவெள்ளைக்கு

கெச்சக்காயிலை ரசம் பலம் (௨) தயிரிற்கலந்துக் கொடுக்கவும் ஒருபலம் சிறுலவங்கப்பட்டையைக் கியாழம் வைத்து அந்தியில்கொடுக்கவும் கடும்பத்தியம் இப்படி (ரு) நாள் கொடுக்கவும்.

மேகந்தீர.

சீந்திலுப்பு மூங்கிலுப்பு ஏலக்கா கற்கண்டுகூட்டி அரைத்து சுண்டக்காய் பிரமாணம் கொடுக்கவும்.

கொருக்கிற்கு.

லிங்கம், பூரம், முதார்சிங்கு படிகாரம், படிகாரத்தைமாத்திரம் நெருப்பிலிட்டு பொங்க வைத்து நன்றுய்ப்பூர்த்தபின் யெடுத்து (௪) தினுசும் ஓரிடையாய் நிறுத்துமைபோல்தூளாக்கி கொஞ்சம் வெண்ணெய்யிட்டு மெழுகுபோல் குழைத்து டப்பியில் வைத்துக்கொண்டு லிங்கத்தின் மேல்வரும் மேக

ரிணத்திற்கு சுவர்லெட்டு நீரிஞல் கழுவி துடைத்துவிட்டு இந்தமூலாளைத் தடவமூன்று வேளையில் உலரும்,

{ ஆராத ரிணங்களுக்கு களிம்பு }

துருசு	விராகநிடை	௫
முதார்சிங்கு	,,	௧௦
மொழுக்கு	,,	௧௨
வெள்ளைக்குங்கிலியம்		௬
தலைமண்டையோடு		௧
நல்லெண்ணை	பலம்	௫

ஒரு பெருஞ்சட்டியில் எண்ணையை ஊற்றி மெழுகைப் போட்டு காச்சி உருகினவுடன்மற்ற மருந்துகளைப் பொடித்து தூள்செய்து போட்டு காய்ச்சி ஒரு பெருஞ்சட்டியில் தண்ணீர்விட்டு அதில் காய்ச்சிய மருந்தை சாய்த்து கையால்பிசைந்தால் வெண்ணைபோல் வரும் அதைஎடுத்துக்கொண்டு சீலையில் தடவி கொருக்கு குழிப்புண் மேகரிணம் இதுகட்குப் போட மூன்றுவேளையில் தீரும்.

மேகசூட்டுக்கு சாந்தி.

துத்தியிலையை கியாழம் வைத்திருந்து பாலுஞ் சர்க்கரையும் கலந்து சாப்பிட்டு வரவும் சாந்தமாயிருக்கும்.

நீர் கடுப்புக்கு.

துத்திவேர் பலம் (௩) திராட்சி பலம் (௧௦) நல்ல ஜெலத்தில் கியாழமிட்டு சாப்பிட்டு வரவும்.

மலச்சிக்கலுக்கு.

துத்தியிலை சிறுபயறுவெங்காயம் சமமாய்ச் சேர்த்துச் சமைத்து சாப்பிடகுணமாகும்.

மலம் உதைய.

சரக்கொண்ணைபூ,புளி, சற்கரை, உப்பு, மிளகாய், கூட்டி துவையல் செய்து சாப்பிட மலம் உதயமாகும்.

வயறு கடுப்பிற்கு.

ஆலம் விழுதை எருமைத் தயிரிலரைத்து எலும்மிச்சம் பழரசம் ஒரு பலங்கூட்டி பிசைந்து சாப்பிடவும்.

வாய்வேக்காட்டுக்கு.

மருதனியிலையை கியாழம் வைத்திருந்துக் கொப்பளிக்க நீங்கும்.

இதுவுமது.

அவுத்திக்கீரைகொழுந்தை பரித்து வாய்க்கொண்ட மட்டுங் காலைவேளையில் மென்று தின்ன மூன்றுநாளில் தீரும்.

இதுவுமது.

மணத்தக்காளி யிலையை சிறுபயர் போட்டு சமைத்துச் சாப்பிட நீங்கும்.

இதுவுமது.

விளாயிலை, செம்பருத்தியிலை, வில்வயிலை, துத்தியிலை, சீமாநெல்லியிலை, வெந்தியம், வெங்காயம் இவைகளை வகைக்கு ஒவ்வொரு பிடியெடுத்து உரலில் இடித்து அரைப்படி ஜெலத்தில்கியாழ

மிட்டு கால்படியாக யிரக்கி 3-வேளை கொப்பளிக்கவும்.

கைகால் குடைச்சலுக்கு,

பூமிசர்க்கரைக்கிழங்கை நல்ல ஜலத்திலரைத்து பூசிவரவும்.

இதுவுமது

மருதணி பூவை நல்லெண்ணை யில்காய்ச்சி பூசியும்வரலாம்.

இதுவுமது

நல்லெண்ணெய் எருக்கன்பால் புளியிலைரசம் நொச்சிரசம் வெள்ளாட்டுப் பால் வகைக்கிசேர் (௨) அபினி தோலா (௨) இவைகளை ஒன்றாகக் காய்ச்சிவடித்து (௩) நாள் தடவதீரும்.

வெட்டு காயத்தின் உதிர பெருக்கு நிற்க

மாசிக்காய்களை சுட்டு அதின்சாம்பல்களை தளமாய் வைத்தழுத்த உதிரப் பெருக்கு நிற்கும்

வெட்டு காயம் அடிகள் ரிணங்களுக்கு

பேன்கொட்டை (க) ரசகற்பூரம் பலம் (௨) ஏலரிசிபலம் (வ)இவைகளைவாங்கி தேங்காயெண்ணெயி லரைத்துகலக்கி வெய்யலில் வைத்து யெடுத்து தடவி சீலைபோடவும் ஈ யெறும்பு மொய்க்காது வாசனையாக யிருக்கும்.

சோரிசிரங்கு.

சுத்தி செய்த கெந்தகம் பலம் வீசம் ரசம்வீசம் நீரடிமுத்து வீசம் பலம், இம்மூன்றும் ஊமத்தங்காயைக் கீறி உள்ளே வைத்து (சு) வரட்டியில் புடம்வைத் தெடுத்து அந்த காயுடன் எருமைவெண்ணெய்வைத்தரைத்து காலையில் பழயது சாப்பிட்ட பிறகு திரேகத்தில் பூசிக்கொண்டு (உ) மணிக்கு யிலுப்பை புண்ணாக்குசுட்டு அறைத்து குளிக்கவும் ஒருநாளையில் தீரும்.

சகலபடைகளுக்கு.

ரோஜனம் பலம்(கஉ) குழாகெந்தகம் பலம்(௨) வெண்காரம் பலம் (௲) சீனக்கற்கண்டு பலம் அரிக்கால், இவைகளை வெள்ளாட்டுப்பாலி லரைத்து பில்லை தட்டி வைத்துக்கொள்ளவும் எவ்விதபடைகளுக்கும் நல்ல ஜலத்தில் இழைத்துத் தடவ உதிரும் பிறகு எண்ணெய் சாப்பிட்டால் தான் உள் வியாதிகள் அரும்.

இரப்பு இருமலுக்கு

இஞ்சிச்சார் ஈரவெங்காயச்சார் யெலுமிச்சம் பழச்சார் இவை மூன்றும் சமனாகச்சேர்த்து மூன்றுநாட் கொடுக்கக் தீரும் இச்சாபத்தியம்.

கோழையிருமலுக்கு

கோழையிருமலுடன் கபங் கட்டியிருந்தால் (ரு) பலந் தேனைகாய்ச்சி சுடுகையில்தானே மிளகுதூள் தோலா (க) பொரித்தவெண்காரம் தோலா (க) இதுகளை கலக்கி வேளைக்கி (க) தோலாவீதங் கொடுக்க தீரும்

புகை இருமலுக்கு

சுக்கு திப்பிலி மிளகு மூன்றும் சமயிடையா யெடுத்து மை போலரைத்து மெல்லிய சீலையில் வஸ்திரகாயஞ்செய்து அந்த யிடைக்கி வெள்ளை சற்கரையில் இரண்டாந்தர மாகிய பூரு சர்க்கரைச் சேர்த்து புட்டியில் வைத்துக்கொண்டு வேண்டியபோது திருகடிப் பிரமாணமெடுத்து பசும்நெய்யில் குழைத்து சாப்பிட மூன்று வேளையில் தீரும்.

இதுவுமது

திப்பிலியை அரைத்து வஸ்திரகாயஞ் செய்து தேனில் குழைத்துச் சாப்பிட புகையிருமல் தீரும்.

மார்கபத்திற்கு.

நரிவெங்காயம் காலேவீசம் விராகனிடை சுக்குத்தூள் (க) விராகனிடை கப்பு (க) விராகனிடை சமனுயகம் அரையே அரிக்கால்விராகனிடை இதை கற்கண்கிபாசில் சேர்த்தரைத்து (உ) குன்றியிடை மாத்திரை செய்து (ரு) மாத்திரை வரையில் கொடுக்கலாம்.

இருமலுக்கு வாயில் அடக்கமருந்து

அதிமதுரம், பொரித்த வெண்காரம், வெள்ளை மிளகு வகைக்கி தொலாம் (க) கல்வத்தில் இட்டு கத்தாழைச் சோர் விட்டரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுணர்த்தி வாயில் (உ) மாத்திரை அடக்கி உமிழ் நீர் முழுங்கவும்.

இரைப்பு வியாதிக்கு.

ஊமத்தன் வேர் நிழலிலுலர்த்தி புகை பிடிக்க மார் பின்னுரையை யறுக்கும்.

இரத்தங்கட்டிய வீக்கத்திற்கு.

வேப்பிலையையரைத்து சட்டியில் கிளரிக்கட்டவும்.

சிறுவர்வயிற்றுப்பூச்சிக்கு.

பப்பாய்க்காய்ப்பால் விராகனிடை (க) முதல் (ரு) விராகனிடை வரையில் வெந்நீர் அல்லது பசும்பாலில் கொடுத்து (ரு) மணிநேரம்பொருத்து ஆமணக்கெண்ணெய் ஒரு கரண்டி கொடுக்கவும்.

குழந்தைகள் வயிற்றுபூச்சிவிழ

புரசம் விரையை அரைத்து பால், நெய், சற்கரை சேர்த்து லேகியமாய்க் கிளரி களற்சிக்காய்வீதங் கொடுக்கலாம்.

பெரியவர்களுக்கு வயிற்றுப்பூச்சி விழ

நெல்லில் வேகித் தெடுத்த தேங்காயுடன் எலக்கா அரிசி பலம்-க, தோல் நீக்கிய புரசம் விரை பலம்-க, இரண்டுங் கூட்டி அரைத்து கழற்சிக்காய்ப் பிரமாணம் யெடுத்து சற்கரையில் வைத்து சாப்பிட கிருமிகள் விழும்.

இதுவுமதுவயிற்றுகிருமி விழ.

வாளப் பருப்பு, சாரைப் பருப்பு, கஸ்தூரி மஞ்சள்,

பாதம் பருப்பு வகைக்கு ஒரு பலம் கூட்டி அரைத்து துணியில் முடித்து ஜெலத்தின் மீது தொலாந்திரம்கட்டி யெரித்து அதில் வரும் எண்ணெயைப் பிழிந்து (க) துளி அல்லது (உ) துளிகள் கொஞ்சம் சற்கரையில்விட்டு கொடுக்கபேதியுடன் நாக்கு பூச்சிகள் விழும்

{ புண்களில் அல்லது ரிணங்களி லிருக்கும் கிருமிகள் வெளிப்பட }

அசரை என்னும் மீனை அரைத்துக் கட்டினால் கிருமிகள் விழும், அல்லது மூங்கில் குருத்தை யரைத்து கட்டினாலும் விழும், அல்லது கற்பூரத்தை யெருக்கன் பாலால் அரைத்து தடவி குதிரை லத்தையை புகைகாட்டினால் கிருமிகள் விழும் அல்லது நண்டு வளைகளிலுள்ள களிமண்ணை பூசி வைத்தாலும் கிருமிகள் ரிணத்தை விட்டு வெளியாய் விழும் பிறகு வேப்பம்பட்டை கியாழத்தால் கழுவவும்.

{ காக்கை வலிக்கும் விக்கலுக்கும். }

கற்பூரம் குன்றி (க) பெருங்காயம் குன்றி (உ) சாராயம் துளி (சா) வேலன் கோந்துயிளகில் அரைத்து (கூய) மாத்திரைசெய்து நாளைக் கொரு தினம் (கூ) மாத்திரை கொடுக்கவும்.

வாய்வு யிடுப்பு வலிக்கு கற்பூரத்தை சாராயத்தில் அரைத்து தேய்க்கவும்.

கீல்வாய்விற்கு

கற்பூரம் விராகனிடை (ச) சாராயம் துளி (யரு) எள்ளெண்ணெய் பலம் (உ௦) இதில் அரைத்து தடவவும்.

தாகமடங்க.

சுட்ட ரொட்டி ஜெலத்தில் இட்டு அடுப்புக்கரியின் தூள் கொஞ்சம் போட்டு காச்சி கொடுக்கவும்,

புதிய மூலநோய்க்கு.

கஞ்சாயிலை ஒருபிடி மஞ்சள் தூள் விராகனிடை (உ) எள்ளெண்ணெய் விராகனிடை (உ) இவைகளைக் கூட்டி யரைத்து தடவவும்.

{ சாதம் ஏற்கவும். தேக வலிவிற்கும். }

நில வேம்பு விராகனிடை (ச) கிச்சிலிதோல் விராகனிடை (க) தணியாவிராகனிடை (௦) சாராயம் விராகனிடை (கூஉ), (யகூ) பலம் வெந்நீர் கூட்டி இரண்டு நாழிசென்று வடிக்கட்டி வேளைக்கி (அ) விராகனிடையாக இரண்டு வேளை சாப்பிடவும்.

பேதிக்கி.

சந்திரமல்லி வேர் யென்னும்பேதிக் கிழங்கு (க) விராகனிடை திராட்சிஉப்பு (உ) விராகனிடை கூட்டி (க) விராகனிடை கொடுக்கவும்.

இதுவுமது

அதிமதுரம் விராகனிடை (ரு-உ) திராட்சி உப்பு விராகனிடை (அ) கியாழம் வைத்து கொடுக்க பேதியாம் தாகமடங்கும்.

இதுவுமது

நிலாவிரை விராகனிடை (ச) தனியா விராகனிடை (க) கியாழம் வடித்து திராட்சி உப்பு விராகனிடை (உ) கூட்டி கொடுக்கவும்.

{விரைவீக்கத்திற்கு கணு நோய்களுக்கு}

நொச்சிலையை வேகவைத்துக் கட்ட குணப்படும்.

{காதுநோய் அல்லது மந்தத்திற்கு.}

வெள்ளைப் பூண்டை பஞ்சுபோல்பிடித்து சீலையில் கட்டி தீபத்தில்காட்டி அந்த தயிலத்தை ரு-ச-துளிகள் பிழியவும்.

கிராணிக்கு.

எலுமிச்சம் பழத்தை நாலுபிளவாய்ப் பிளந்து அரைவிராகனிடை அபினியை வைத்து நூலால் கட்டி சாணி குகையில் வைத்து புடம் போடவும் வெந்த பிறகெடுத்து (ச) நாளைக்கி நாலுபிளவு சாப்பிடவும்.

இரத்தகிராணிக்கு.

முள்ளிலவம்பிசினியை தயிரிலரைத்து 3-நாள் காலையில் சாப்பிட்டுவர நிவர்த்தியாம்.

பசிதீபனமுண்டாக.

ஓமம் பலம் (க) குரோசானி ஓமம் பலம் (க) நாகடுகு பலம் (க) தூள்செய்து க௦-பலம் பனவெல்லத்திற் பிசைந்து புங்கங்கொட்டைப் பிரமாணம் பொசிக்கவும்.

(பல்லில் ரத்தம்விழுதலுக்கு.)

கடுக்காய் சுக்கு காசிக் கட்டி இந்துப்பு இதுகளை சமனாய் பொடி பண்ணி பல்லில்தேய்க்க ரத்தம் நிற்கும்.

இதுவுமது

பல்நோய் பல்லசைவு இதற்கு ஒரு கலசத்தில் உப்பிட்டு அதுநிறைய யெருக்கம் பால் தளும்ப விட்டு மேல்கவசம் மூடி மண்சீலைசெய்து வெட்டு வரட்டியில் புடம் வைத்தெடுத்து பொடித்து வலியெடுக்கும் பல்லில் தேய்க்க மூன்று வேளையில் நிற்கும்.

{பல்வலிவிற்கு சாதாரண பொடி.}

பொன்னுங் கொட்டை உப்பு சமனாய்தூக்கி பொன் வரலாய் வருத்து பொடித்துவைத்துக்கொண்டு நிதம் பல்துலக்கிவர பல்ஆடாது பல்நோய் வராது பல்லில் யீருகட்டாது புழுசேராது ஆயுசு மட்டும் பல் விழாது.

பல்நோய்க்கு
கோப்பளிக்க கியாழம்

வேப்பம் பட்டை வேலம் பட்டை ஆவாரம்பட்டை கடு

க்காய் காசுக்கட்டி களிப்பாக்கு இதுகள் வகைக்கி (வ) பலம் கொண்டுவந்து யிடித்து (கஉ)படி தண்ணியில் கலக்கி உழக்கு கியாழமாக யிரக்கி வாயில் வார்த்து கொப்பளிக்க தந்தநோய் தீரும்.

பல்நோய்க்குதேய்க்க மருந்து

சுக்கு கடுக்காய் நாயுருவி வேர்ப்பட்டை இதுகள் சமன் கூட்டி வருந்து பொடிசெய்து பல்தேய்த்துவர பல் நோய் பல்அசைவுதீரும் பல்லுறுதி யுண்டாகும்.

இதுவுமது

இந்துப்பு சுக்கு இவை ரெண்டும் பொடிசெய்து பல்தேய்த்துவர பல்நோய்தீரும்.

மாதவிடாயுண்டாக.

மாவிலிங்கம்பட்டை உள்ளிமிளகு இவை சமனாக அரைத்தவிழுது கொட்டைப் பாக்களவு மூன்றுநாள் கொடுக்க மாதவிடாய்வரும்.

இதுவுமது.

ரசகற்பூரம் விராகனிடை க) யேழுநாள் முலைப்பாலில் ஊரவைத்து எடுத்து ஒருபிடி வேப்பங் கொழுந்து வைத்து அரைத்து ௰அ.உண்டையாய் செய்து இரண்டுவேளையும்(கூ) நாள் சாப்பிட மாதவிடாய் வரும் கோழிக்கரி ஆட்டுகரி உப்புக்கண்டம் ஆகும், புளி தள்ளவும் வெந்நீர் பரிமாரவும்.

தேரளாதபெண்களுக்கு.

கொட்டிக்கிழங்கு மேலேயிருக்கும் மயிரெல்லாம் போக்கி நெகிழ அரைத்து சுண்ணம்புகூட மத்தித்து சாயங்காலம் தொப்புளில் தடவவும்.

முதற்காண்டம்.

முற்றுப்பெற்றது.

இனியிருக்கும் கண்டாவிழ்தமான உத்தமமுறைகளை இரண்டாங்காண்டத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

உ

தேவிசகாயம்.

உட்கொண்ட ஆகாரங்கள்

சீரணகால நாழிகை.

பால்கூடிய அன்னம்-தேன்-பச்சரிசி-நல்ல வெல்லம் மா-பொரியுண்டை-மிளகோதனம்-பால்கலந்தாவது இடை யிடை அடுத்தாவது புசிக்கில்,	௨௰-நாழிகை
நீர் அன்னம்	௰௮-நாழிகை
தயிர் அன்னம் வெண்ணெய்கூடிய அன்னம் சூரணம் தைலம் லேகியம் கிருதம்	௰௨-நாழிகை
கத்தரிக்காய் முதலிய காய்கறிகள்	௮-நாழிகை
அருந்தும்பதமாய் ஆரியஜலம்	௯-நாழிகை
முக்கால்கூறு சுண்டியஜலம் கியாழம்	௭ஒ-நாழிகை
விருட்சம் செடி கொடி இவற்றி லுண்டாகும் பூ தளிர்-இதுகூடிய துவயல், உயர்ந்த பழவர்க்கங்கள் கருணை மிளகருணைசேனைக்கருணை முதலிய கிழங்குதினுசுகள் வித்துக்கள் கனிகள் பருப்புவகை	௭ஒ-நாழிகை
அருசுவை பதார்த்தங்களெல்லாம்	௭-நாழிகை
கனிகளால் பிழியபட்டரசம் கஞ்சிவகை சற்கரை-பாணகம்-வருத்தமாவைகரைத்தருந்தல்	௭-நாழிகை
அரைத்தமருந்துகள் ஜெயநீர் காய்ந்தநீர்	௬-நாழிகை
கழுநீர் காடிநீர் குளுநீர் யிளநீர் சாராயம்	௫-நாழிகை
தயிரன்னம்-மோரன்னம்புசித்து தண்ணீர்குடித்த	௪-நாழிகை
பஸ்பங்கள்	ந_தூ-நாழிகை

அகஸ்தியமுனிவர் கூறிய

ஆயுள்வேதவா ரென்றறிக.

உ

தேவிசகாயம்.

அளவை அல்லது

இடைகளின் விவரம் கூறியது.

ஙகூ-குன்றியிடைகொண்டது	க-பணவிடை
கூ பணவிடைகொண்டது	க-விராகனிடை
கவ விராகனிடைகொண்டது	க-களஞ்சி
ய விராகனிடைகொண்டது	க-பலம்,
க ரூபாயிடைகொண்டது	க-தோலா
ங ரூபாயிடைகொண்டது	க-பலம்
அ பலம்கொண்டது	க-சேர்
யங பலம்கொண்டது க பவுன், அல்லது	க-ராத்தல்
உச பலம்கொண்டது	க-பக்காசேர்
சய குண்டுமணிகொண்டது	க-களஞ்சி
ஙஉ குண்டுமணிகொண்டது	க-விராகனிடை
கிரையின் என்பது	உ-குன்றி
ஸ்குரூபல் என்பது	ய-குன்றி
டிராம்என்பது	ஙஉ-குன்றி
அவுன்சுஎன்பது	அ-விராகனிடை
திருகடி என்பது	ங-விராகனிடை
பயின்டு என்பது	ளகூய-விராகனிடை
காலன் என்பது	ளஉஅ-பலம்

உ

வயித்தியரை வேண்டாமல் தாங்களே செய்துக் கொள்ளத்தகுந்த கோஷாயிசுவாமிகள்.

அநுபோகவயித்திய

பிரம்மரகசியம்.

புத்தக விளம்பரம்

ஜெகந்நாத ஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயி சுவாமிகளால் உபயோகித்துவந்த சத்தியமான உத்தம முறைகள்யாவும் இந்த (அநுபோக வயித்திய பிரம்ம ரகசியமென்னும்) புத்தகம், 1, 2, 3, 4, 5, 6, 7, 8, காண்டங்களாகப் பிரித்து அச்சிட்டு முடிந்திருக்கிறது. இதில் சுமார் (2500) முறைகளுக்குக் குறையாமல் அடங்கி யிருப்பதன்னியில் ஒவ்வொருமருந்துகளின் பாகமும், இடைக் குறிப்பும், புடதிட்டமும் அரைப்புக்கணக்கும், அளவின் நிதானமும், செய்பாகமும், உண்பாகமும், பத்திய விதியும், பரிகார நெரியும் கூரக்கா சிகிச்சை முறைகள் மருந்துகளின் சுத்தி முறைகள் யாவும் உயர்ந்த தாளில் அச்சிட்டு புல்கலிகோ பயிண்டுசெய்து விக்கிறயஞ்செய்து வரப்பட்டுவருகிறது. எட்டுகாண்டங்களும் ஒரேகட்டடமாக கீழ்கண்ட விலாசத்தாருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

1-முதல் 8-காண்டமும் ஒரேகட்டடம் ரூ	4	0	0
V. P. போஸ்ட் சார்ஜ் அணா	0	14	0

எமது விலாசம்:

பூ. சு. குப்புசாமி முதலியார் குமாரர்
பூ. சு. கு. கோவிந்தராஜ் முதலியார்
ஸ்ரீ சுந்தரவிலாசம் பிரஸ்,
வேப்பேரி போஸ்ட் மதறாஸ்.